பாசாக

அக்டோபர் '47

..அணா 4..

842



OFFICE OF THE REGISTRAR

1947

6-7

3211,N45B5
N47,1.6-7
208428

தீபாவளி
வெளியீடு
பக்ஷிராஜாவின்
கன்னிகா
டைரக்ஷன்-ஸ்ரீராமுலு நாயுடு
ஸரோஜினி, கிருஷ்ணன், மதுரம்,
வரகன் B. Sc.. ஸங்காளலக்ஷ்'மி. ஹரிணி,
காளி என். ரத்னம், ஹேமமாலினி, லலிதா,
பாலசுப்ரமணியம், பத்மினி நடித்தது.
NARAYANAN Co Release

பாசரசு

ஆசிரியர்கள்
எம். எஸ். பாசு
சரசுவதி பாசு

மலர் 1 | அக்,நவம்.'47 | இதழ் 6,7

OFFICE OF THE REGISTRAR OF
29 DEC 1947
MADRAS

இந்த மாதம்

	பக்கம்
அமர கவிக்கு அஞ்சலி	3
யௌவனத்தின் சோபை	6
இரு சொட்டுக்கண்ணீர்	17
அவள் யார்?	22
கை வண்டிகள்	29
தீண்டா நெருப்பு	35
ஆயுள் தண்டனை	40

பாசரசு - சென்னை 1

அட்டை அழகி: 'கோகுலதாஸி'யில் நடிக்கும் லலிதா.

"பாசரசு" வில் வரும் கதைகளில் உள்ள பெயர்களும் சம்பவங்களும் கற்பனை.

சினிமா நக்ஷத்திரம் ராஜம் சொல்லுகிறார்

தமிழ் நாட்டில் வெளியாகும் அநேக சினிமா பத்திரிகைகளில் எனக்கு 'கலை' பத்திரிகையை அதிகம் பிடித்திருக்கிறது. அதில் வரும் "கேளுங்கள்", "சினிமா நடிகர்கள் பேட்டி", "ஸ்டூடியோ செய்திகள்" முதலியவைகள் படிப்ப தற்கு சுவாரஸ்யமாய் இருக்கின்றன. 'கலை'க்கு தமிழ்நாட்டில் நல்ல மதிப்பு இருக்குமென்று நம்புகிறேன்.

ஸ்ரீ. ராஜம்

மலர் 1 | அக். நவம்பர் 1947 | இதழ் 6,7

அமரகவிக்கு அஞ்சலி!

அமர கவி சுப்ரமண்ய பாரதியை வணங்குகிறோம்; வாழ்த்துகிறோம்; தலை குனிந்து அஞ்சலி செய்கிறோம். அவர் பிறந்த புண்ய பூமியை நோக்கிக் கரம் குவிக்கிறோம்.

சமீபத்தில் அமரகவிக்கு என்று தமிழர்கள் மணி மண்டபம் கட்டிக் கௌரவித்திருக்கிறார்கள். அது தமிழுக்கும், நாட்டிற்கும், மக்களுக்கும் மகத்தான கௌரவம் என்று சொல்லத் தேவை இல்லை.

கவி பாரதி தமது பாடல்களினால் தட்டி எழுப்பியவர். உணர்ச்சிக்கும் புதிய உத்வேகத்தைக் கொடுத்தவர். இளைஞர் உலகிற்குப் புது விழிப்பை உண்டாக்கியவர். நெஞ்சை அள்ளும் துள்ளும் உணர்ச்சியை வாரி வீசிய பெருமை அவருடையதே ஆகும்.

அப்படிப் பட்ட அமர கவியின் ஞாபகார்த்தமாக அவர் பிறந்த புனித மண்ணில் மணிமண்டபம் ஒன்று நிருவும் அருமையான யோசனை, ஒரு நாள் ஸ்ரீ கல்கி அவர்களுக்கு உதித்தது. அது தமிழர்களின் பாக்கியமாயிற்று. தமிழர்களுக்கு அவர் வேண்டு கோள் விட்டார். பணம் வந்து குவிந்தது. ஏழையிலிருந்து ஜமீன்தார் வரையில் அள்ளி அள்ளி வழங்கினார்கள்.

அன்புப்பணி மணிமண்டபமாக மாறிற்று. அதன் திறப்புவிழா சென்ற 13—10—47-ல் அமோகமாக எட்டையபுரத்தில் நடந்தேறியது.

வங்க கவர்னர் ராஜாஜி அவர்கள் வைபவத்திற்குப் பறந்து வந்து தலைமை வகித்துக் கௌரவித்தார்கள். அவர்கள் வட நாட்டுக்குப் போயிருந்த போதிலும் உள்ளம் தமிழ் நாட்டை விட்டு அகல வில்லை என்று நிரூபித்து விட்டது எட்டையபுர விஜயம்.

கவர்னராகி ராஜாஜி அவர்கள் மணி மண்டபத் திறப்பு விழாவிற்கு வருகிறார்கள் என்று கேள்விப் பட்டதிலிருந்து தமிழ் நாட்டுக்கு ஏற்பட்ட குதூகலத்திற்குக் கங்கு கரை இல்லை. "ஜே! ஜே!" என்று லட்சம் பேர்கள் எட்டையபுரத்துக்குப் புறப்பட்டுச் சென்று அக் கிராமத்தை திணர வடித்து விட்டார்கள். வைபவத்தன்று எட்டையபுரம் இந்திரலோகமாகி விட்டது; வந்திருந்தவர்களின் முகங்களில் காணப்பட்ட தேஜஸ், பெருமிதம், உணர்ச்சியை வர்ணிக்க வார்த்தை ஏது?

கண் கொள்ளாக் காட்சி என்பவர்களே. அது எட்டையபுரத்துக்கு மட்டுமே பொருந்தும்: ஏனெனில் அந்த வைபவத்தைப் பார்ப்பதற்கு நமக்கு இரண்டு கண்கள் போதாது, இன்னும் இரண்டு, மூன்று இருந்தாலும் தேவை தான் என்று ஒவ்வொருவரும் எண்ணினார்கள். காப்பியை மறந்து, சாப்பாட்டை மறந்து நேரத்தை மறந்து ஆயிரக்கணக்கானவர்கள், பந்தலில் ஆணி அடித்து உட்கார வைத்திருந்தது போல் அமர்ந்திருந்து ராஜாஜியின் அர்த்த புஷ்டி நிறைந்த தலைமைப் பிரசங்கத்தைக் கேட்டுப் பெருமிதம் அடைந்தனர். "தேன்வந்து பாயுது காதினிலே!" என்று அப்பிரசங்கத்துக்கு உவமானம் சொன்னார்கள்.

"பாரதியாரின் பாட்டை மட்டும் பாடினால் போதாது. அவைகளில் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த கருத்துக்களைப் பின்பற்ற வேண்டும். அவர் தமது வாழ் நாளில் எவ்வளவோ கஷ்டப் பட்டபோதிலும் மகிழ்ச்சியுடனே தான் வாழ்ந்தார். அது தான் பாரதியின் பண்பாடு. தமிழர்களின் பண்பாடு அதுதான்" என்று கவர்னர் ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டுச்

சொன்னார்கள். "உலகத்திற்கு இனி இந்தியா தான் வழிகாட்ட வேண்டும்" என்று மேலும் சொன்னார். "இந்தியாவிற்குத் தமிழ் நாடு வழி காட்டி விட்டது. தமிழ் நாட்டிற்குப் பாரதி வழி காட்டி விட்டார்" என்று அவர் குறிப்பிட்டதை நாம் மறக்க முடியுமா?

மற்றும் சென்னை மாகாண தமிழ் மந்திரிகள் விழாவில் கலந்து கொண்டு கருத் தழகுடன் பேசினார்கள் பலப் பல விஷயங்களை விளக்கிச் சொன்னார்கள். குமார ராஜா ஸ்ரீ முத்தையா செட்டியார், பாரதிப் பாடல்களைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக வைக்கவேண்டும்" என்று கூறியது மிகவும் நல்ல யோசனை. சென்னை சர்க்கார் உடனே அந்தக் காரியத்தைச் செய்து முடித்துப் பழைய களங்கத்துக்குப் பிராயச் சித்தம் செய்து கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

இப்படிப் பட்ட ஏற்பாடு உலகத்திற்கே ஒரு அற்புதம். கவி எல்லோருக்கும் பொதுவானவர் என்ற மதிப்பு மிகுந்த மனப்பான்மையுடன் பல கட்சிப் பிரமுகர்களும் இவ் விழாவில் கலந்து கொண்டு, எட்டையபுரத்துக்கு எட்டுத் திக்கிலும் கௌரவம் ஏற்படும்படி செய்து விட்டார்கள்.

தமிழ் நாடு கொடுத்து வைத்திருந்தது. நாம் பாக்கியம் செய்திருந்தோம். உலகமே கண்டு வியக்கும்படி, பிரமிக்கும்படி அற்புதம்" செய்து விட்டோம், புதுமை புரிந்து விட்டோம், எட்டைய புரத்தை உலகின் உன்னத க்ஷேத்திரமாக்கி விட்டோம்.

இதற்கு முழுக் காரணமான ஸ்ரீ கல்கி அவர்களது அபார ஒத்துழைப்பை 'நன்றி' என்ற பதம் உள்ள வரையில் மறக்க மாட்டோம்.

வாழ்க மணி மண்டபம்!

யௌவனத்தின் சோபை

"தினகரன்"

1

"வந்தே மாதரம்!, பாரத மாதாகீ ஜே!, மகாத்மா காந்திகீ ஜே!, ஜெய் ஹிந்த்!" என்ற சுதந்திரக் கோஷம் வானைப் பிளந்தது. தூய கதராடை உடுத்திய அந்த இளைஞர்களுக்குத்தான் எவ்வளவு உற்சாகம் இதைக் கோஷிப்பதில், என்று நினைத்து ஆச்சரியத்தால் எல்லோரும் திகைப் படைந்தனர். இப்பொழுதே இவ்வளவு உற்சாகத்துடன் ஜெயகோஷம்செய்யும் இவர்களுக்கு இன்னும் இந்தியா பூரணசுதந்திரமடைந்துவிட்டால், உற்சாகம் எப்படித்தான் கரை புறண்டோடுமோ என்று தோன்றியது.

அன்று நகரில் தேர்தல் தினம். நகரெங்கும்ஒரேஜெய கோஷக் கூக்குரல்களும் கிளர்ச்சியுமாகத்தான் இருந்தன. சாரை சாரையாகச் சென்றனர், தேர்தல் போட்டியில் கலந்து கொண்டவர்களும் அவர்களைச் சூழ்ந்த கூட்டத்தாரும்.

"ஜஸ்டிஸ் பார்ட்டி" "காங்கிரஸ் பார்ட்டி" அந்தப் "பார்ட்டி" இந்தப் "பார்ட்டி" என்று அனேகக் கட்சிகள் தேர்தலுக்கு நின்றன. மக்களிடையே தான் எவ்வளவு பிரிவுகளும் வேற்றுமைப் பாராட்டல்களும் இருக்கின்றன. தூய கதராடை உடுத்திச் செல்லும் காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் மற்ற எல்லாக் கட்சிகளையும் விட மிகக் கவர்ச்சிகரமாகத் தென்பட்டது. அவர்கள் கையில் பிடித்துள்ள மூவர்ண தேசியக் கொடிகள்தான் எவ்வளவு லாவகமாக காற்றில் ஆடின. "வந்தேமாதரம்!", "காந்திக்கு ஜே!" என்றகோஷங்கள் தான் என்

அப்படி மயிர் கூச்சலுண்டாகும்படி செய்தன?

ஆனால் இந்த காந்தி கர கோஷங்கள் கதிர்வேலுப்பிள்ளைக்குச் சற்றும் பிடித்ததாகவே தெரியவில்லை. அவரும் ஒரு இந்தியனாக இருந்தும் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தவரில்லை. அதோடு கூட அவர் அதைத் துவேஷிக்கவும் தயங்கவில்லை. காங்கிரஸ் கட்சிக்காரர்கள் ஒன்றுக்கும் பிரயோசனமில்லாதவர்கள், பயந்தாங் கொள்ளிகள் என்பது அவரது எண்ணம். மேலும் "ஜஸ்டிஸ்" கட்சியைச் சேர்ந்தவரான அவர் தன் கட்சி ஒன்றில் மட்டும்தான் நியாயமிருக்கிறது என்று எண்ணினார். ஆனால் இதுமட்டும் நியாயமான எண்ணமோ, என்னவோ, யார் கண்டார்கள்?

முதலில் கூறிய வெற்றிக் கோஷத்தைக் கேட்டு கதிர்வேலுப் பிள்ளையின் மகள் குணவதி, மாடி உள்ளிருந்து வெகு விரைவாக மாடி வராந்தாவுக்கு வந்தாள். அவள் கையில் பிடித்திருந்த பேனா பிடித்தவண்ணமிருந்தது. அப்பொழுதுதான் அவள் ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது.

கீழே குனிந்து பார்த்து கூட்டத்தை நோக்கினதும் அவள் உடல் சிலிர்த்தது. அப்போது அவளுக்கிருந்த தேக நிலைமையில் அவளால் அக் கூட்டத்தை உன்னிப்பாய்க் கவனித்துப் பார்க்கக் கூட முடியவில்லை. அவளையறியாமல் மனதிற்குள்ளே, "வந்தேமாதரம்! ஜெய்ஹிந்த்!" என்று கூறிக்கொண்டாள். பிறகு உற்சாகம் கரை புறண்டு போகவே அவள் தன்னையறியாமல், "அப்பா! அப்பா!" என்று தன் தந்தையை அவ்விடம் அழைத்தாள். அப்பொழுது கதிர்வேலுப் பிள்ளை மாடி ஹாலில் உட்கார்ந்து கொண்டு ஏதோ சில முக்கிய தஸ்தாவேஜிகளில் ஈடு பட்டிருந்தார்.

"என்னம்மா, என்ன?" என்று கேட்டுக் கொண்டே கட்டுகளைப் போட்டு விட்டு அவரும் மாடி வராந்தாவிற்கு வந்தார்.

"கீழே பாரப்பா, அதோ போய்க் கொண்டிருக்கிறது கூட்டம். வந்தேமாதரம், ஜெய் ஹிந்த்!" என்றாள் குணவதி உற்சாகத்துடன்.

இதைக் கேட்டு கதிர்வேலுப் பிள்ளையினுடைய முகம் ஒரு நிமிஷம் சுணங்கியது. தீவிர "ஜஸ்டிஸ்" வாதியினுடைய மகளிடமிருந்தா அவர் இப்பேர்ப்பட்ட வந்தேமாதரக் கோஷத்தைக் கேட்க வேண்டும்? குணவதிக்கு ஒரு வேளை பித்துத்தான்

பிடித்து விட்டதோ, அல்லது அஹிம்ஸை, அஹிம்ஸை என்று அலையும் பித்தர்களான காங்கிரஸ் பித்தர்களில் அவளும் ஒன்றாகச் சேர்ந்து விட்டாளா என்று அவர் மனம் தீவிரமாக எண்ணமிட்டது.

பிறகு தெருவில் தன் வீட்டைத் தாண்டிச் சென்ற பிரம்மாண்டமான அந்தக் காங்கிரஸ் கூட்டத்தை அவரால் காணாமலிருக்க முடியவில்லை. அவ்வளவு பிரம்மாண்டமாக இருந்தது அந்தக் கூட்டம்.

பிறகு அவர் தெளிவடைந்து மகளைப் பார்த்து, "என்ன குணவதி! உனக்குப் பித்துப் பிடித்து விட்டதா? ஜஸ்டிஸ் கதிர்வேலுப் பிள்ளையினுடைய பெண்ணான நீயா இப்படிப் பேசுகிறாய்? அந்தக் கூட்டத்தில் அப்படி என்ன இருக்கிறது உனக்கு?" என்று கடிந்து கொண்டார்.

இப்படிச் சொல்லி விட்டு, அவர் பார்வை யதேச்சையாக மறுபடியும் கீழே சென்றது. அக் கூட்டத்தில் இரண்டு காங்கிரஸ் கொடிகளை பெருக்கல் குறி போல் பிணைத்துக் கட்டியிருந்த கொடியைக் கையில் பிடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தான் ஒரு இளைஞன். சற்றே சிவப்புக் கலரில் ஒரு கதர் ஜிப்பா போட்டிருந்த அவனைப் பார்த்ததும், அவன் தன் தேச விடுதலைக்காகத் தன் இரத்தத்தைக் கொடுக்கச் சித்தமாகயிருந்தான் போலத் தோன்றியது. ஆம்! உண்மையில் அவன் ஒரு தீவிர காங்கிரஸ் தேசியவாதி. தற்போது நடக்கும் மாகாணத் தேர்தலில் ஒரு முக்கிய அங்கத்தையும் வகித்தான் அவன்.

அவனைப் பார்த்து விட்டு மறுபடியுமொரு தடவை முகத்தைச் சுணுக்கிக் கொண்டு திரும்பினார் கதிர்வேலு. அப்பொழுது தன் மகள் குணவதி அந்த யுவனையே பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு, அவர் கோபமுற்று அவள் சிந்தனையைக் கலைத்தார்.

"காலிப் பசங்க! இவங்கதான் பெரிசாகப் புரட்டிடப் போறான்களா. நம் நாடு குட்டிச் சுவராவது இவர்களால்தான். இந்தப் பாழும் தெய்வம் கூடல்ல இவன்கள் பக்கமிருக்குது. கிடக்குது சனி. குணவதி! உள்ளே போய் உன் காரியத்தைக் கவனி. அங்கே என்ன பார்வை? ஜஸ்டிஸ் கதிர்வேலுவினுடைய மகளான நீ இப்படி யெல்லாம் இருக்கக் கூடாது" என்று கடிந்து கொண்டு அவளை உள்ளே போகச் சொல்லி முயற்சித்தார்.

அவருக்குத் தன் மகள் அக் கூட்டத்தையும், முக்கிய மாக அந்த யுவனையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது பிடிக்கவில்லை. ஆனல், குணவதி அந்த யுவனை மிகவும் விரும்பினள். அவள் வாழ்வில் நெருங்கிய சம்பந்தமுடையவன் அவன்.

தன் தந்தை கடிந்துகொண்டதைக் கண்டு அவள் அறை மனதுடன், "உங்களுக்கு அவரைப் பிடிக்கா விட்டால், அதற்காக அக் கூட்டத்தையே உங்கள் வசவுமொழிகளுக்குள்ளாக்குவானேன்? அவர் ஏன்தான் உங்கள் வீட்டில் வந்து தொடர்பு வைத்துக் கொண்டாரோ? அவரிடம் நீங்கள் நடந்து கொள்ளும் முறை எனக்குச் சிறிதும் நியாயமாகத் தென்படவில்லை" என்று மெதுவாகச் சொல்லிக் கொண்டே தன் அறையை நோக்கிச் சென்ருள். தள்ளாமையால் அவள் தேகம் தள்ளாடியது.

"சரி, சரி! உன் பாடத்தை ஆரம்பிக்காதே. என் மகளான நீ என் 'பிரின்ஸிபிலை'த்தான் ஆதரிக்க வேண்டும். நேத்து வந்த அந்தப் பயலிடமா என்னைத் தணிந்து போகச் சொல்லுகிருய்?" என்று மீசை துடிக்கத் துடிக்கச் சொன்னர் கதிர்வேலுப் பிள்ளை இதைக் கேட்டு.

குணவதியும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு தன் அறைக்குள் சென்ருள். அந்தக் கூட்டத்தில் அந்த வாலிபனைக் கண்டதும் அவள் மனம் சஞ்சல மடைந்தது. பிறகு அவளுக்கு வாழ்க்கையில் லேசாக ஒரு வெறுப்பும் தோன்றியது.

அந்த அறையின் மேஜையின் மேல் இரண்டு மூன்று பேப்பர்கள் கிடந்தன. அவைகளில் இரண்டு தாள்களில் ஏதோ ஒரு கடிதம் எழுதப்பட்டிருந்தது. அதை அவள் அக் கூட்டம் வரு முன்தான் எழுதிக் கொண்டிருந்தாள். மேஜையை அடைந்ததும், அவள் அக் கடிதத்தைக் கையிலெடுத்து அதைச் சுக்கு நூருகக் கிழித்துப் போட்டாள். அதே போல் அவள் ஹிருதயமும் சுக்கு நூருக உடைந்து விடும்போ லிருந்தது.

2

ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த கதிர்வேலுப் பிள்ளையைத் தெரியாதவர்கள் ஒருவரும் கிடையா தென்றே சொல்லலாம். சாதாரணமாக கதிர்வேலுப் பிள்ளை என்று கேட்பதை விட, "ஜஸ்டிஸ்" கதிர்வேலுப் பிள்ளை என்று விசாரித்தால், அவரைச் சட்டென்று புரிந்து கொண்டு சொல்லுவார்கள். அவ்வளவு தீவிரமாக அவருடைய பெயரோடு இணைந்த

தாக இருந்தது, அவருடைய கட்சியின் பெயரும்.

ஒரு விதத்தில் அவர் காங்கிரஸை தீவிரமாக எதிர்த்ததே அவர் பெயர் பிரபலமடைந்ததற்குக் காரணமென்று சொல்லலாம். ஒவ்வொரு தேர்தலிலும் அவர் அடைந்த தோல்விகளே அதிகமாக இருந்தன. ஒருவேளை அப்படி அவர் ஒன்றிரண்டு தடவை வெற்றி அடைந்துவிட்டாலும், அச் சமயங்களில் மந்திரி சபையே முறிவடைந்து போய் விடும்! "ஜஸ்டிஸ்" கதிர்வேலுப் பிள்ளையினுடைய தோல்விகளே அவருடைய பெயரை எல்லோரும் அறியும்படிச் செய்திருந்தன எனலாம்!

அப்படி இருந்தும் அவரென்னவோ "ஜஸ்டிஸ்" கட்சியைச் சேர்ந்தவராகவே இருந்து வந்தார். அவர் வெறுமனே "ஜஸ்டிஸ்" கட்சியை ஆதரிப்பதோடு மட்டுமிருந்தால் போதாதா? ஆனால் எங்கும் வெற்றியையே அடையும் காங்கிரஸ் கட்சியை சதா தூஷித்தால் தான் "ஜஸ்டிஸ்" கட்சிக்குத் தன் கடமையைச் செய்வது போலாகும் என்பது அவருடைய தீவிர எண்ணம். இந்த எதிர்ப்பினாலும் அவருடைய பெயர் ஒருவிதத்தில் பிரபலமடைந்திருந்தது! ஆனால் புகழை அடையவில்லை.

இப்படி இருக்க அவருடைய மருமகனான மணவாளப் பிள்ளையும் அவருடைய வசை மொழிகளுக்கும், நிந்தனைகளுக்கும் உட்பட்டார். ஏனெனில், மணவாளப் பிள்ளை ஒரு தீவிர காங்கிரஸ்வாதி! அத்தோடு மட்டுமல்லாமல் வெற்றி யடையும் தேர்தல் போட்டியில், அவர் ஒரு முக்கிய ஸ்தானத்தையும் வகித்து வந்தார். தன் மாமனான "ஜஸ்டிஸ்" கதிர்வேலுப் பிள்ளையினுடைய வசை மொழிகளைக் கேட்டு அவரும் சில சமயம் எதிர் தாக்குதல் செய்வார். ஆனால் அவர் மொழிகள் வசைமொழி நிறைந்ததாக இருக்காது. அஹிம்ஸையையே கடைப் பிடித்த அவர் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல்தான் பேசி இருப்பார்.

மணவாளப் பிள்ளைக்குத் தான் தன் பெண் குணவதியைக் கொடுத்திருந்தார் கதிர்வேலு. குணவதியைக் கலியாணம் செய்து கொள்ளும்போது மணவாளப் பிள்ளை எம். ஏ., வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். கதிர்வேலுப் பிள்ளைக்கு மணவாளன் காங்கிரஸைச் சேர்ந்தவரென்று அப்போது தெரியாது. தெரிந்திருந்தால் அக் கட்சியை எதிர்த்த அவர் தன் பெண்ணை அவருக்குக் கொடுத்திருப்பாரா?

அப்போது படித்துக் கொண்டிருக்கும்போது மணவாளப் பிள்ளையும், தன் காங்கிரஸ் உணர்ச்சியை அவ்வளவாக வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. ஏனெனில் அவர் இன்னமும் ஒரு மாணுக்கனுனதால். காந்தியடிகளின் சொல்படி அவர் காங்கிரஸ் இயக்கங்களில் அவ்வளவாகச் சேர்ந்து கொள்ளவில்லை.

ஆனல், "மணவாளன்" என்ற புனைப் பெயருடன் அவ்வப்போது அவர் காங்கிரஸைப் பற்றி பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதியவண்ணமிருந்தார். அவர் கலியாணத்தின்போது அவர் பிரசுத்திருந்த கட்டுரைகளின் பிரதிகளொன்ருவது அவர் வசம் இல்லை. ஏனெனில், அவர் சேர்த்து வைத்திருந்த பத்திரிகைப் பிரதிகளை ஒன்று விடாமல் அப்வப்போது அவருடைய சிநேகிதர்கள் வந்து பிடுங்கிக் கொண்டு போய் விடுவார்கள்!

ஆனல் அவருக்குக் கலியாணமானபோதுதான் ஒரு ஆச்சரியம் நடந்தது. ஏனெனில், அவ்ருடைய புதிய மனைவி குணவதி, "மணவாள" னின் பிரசுரமான கட்டுரைப் பிரதிகளை எல்லாம் எடுத்து ஒன்ருகச் சேர்த்து வைத்திருந்தாள்! தந்தைக்கு நேரெதிராகக் காங்கிரஸையே ஆதரித்தாள் அவள். தன் தந்தைக்குத் தெரியாமல் சேர்த்து வைத்திருந்த அக் கட்டுரைகளையெல்லாம் ஒருநாள் காணுமல் அவள் திகைப்படைந்து போய் விட்டாள்.

ஆனல் தன் மணவாளனை மணவாளப் பிள்ளை அவைகளை வைத்துக் கொண்டு சுவாரசியமாகப் புரட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு தான் அவளுக்கு உயிர் வந்தது!

அவளைப் பார்த்ததும் அவர் "குண! இந்த 'மணவாள' னுடைய கட்டுரைகளைப் பற்றி உன் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டார் ஒன்றும் தெரியாதது போல்.

"மணவாளனுடைய கட்டுரைகளைப் படித்து மகிழாதவரும் உண்டோ? எனக்குத் தெரிந்தவரையும் என் அப்பா ஒருவர்தான் இதற்கு விலக்கு" என்ருள் அவள், மெதுவாக அக் கட்டுரைகளை அவரிட மிருந்து வாங்க முயற்சித்த வண்ணம்.

அவர் அவைகளைப் பின்புறம் மறைத்துக்கொண்டே, "கொடுக்க முடியாது. வேண்டுமானல் அந்த "மணவாள"னை உனக்குப் பரிச்சயம் பண்ணி வைக்கிறேன், நீ விரும்பினல்" "என்ருர்!

"அவரை உங்களுக்குத் தெரியுமா? இன்றே அவ

ரைப் பார்க்கலாம் வாருங்கள்'' என்ருள் அவள், ஆவல் மிகுதியினல்.

''ஏன்? இப்பொழுதே நீ அவரைப் பார்க்க முடியுமே! உன் எதிரில் நிற்கும் உன் மணவாளனுக்கும், கட்டுரைகள் எழுதும் 'மணவாள' னுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஏனெனில் இருவரும் ஒருவரேதான்! ஸ்ரீமதி குணவதி தேவிதான் அவரை மணவாளனுகப் பெரும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிருள்'' என்று குட்டை உடைத்தார் அவர்.

இதைக் கேட்டு வியப்படைந்து, அவள் தன் மணவாளனை நோக்கினுள் ஆச்சரியத்துடன். உண்மையிலேயே அவர் தனக்கு மணவாளனுகி விட்டார் என்று தெரிந்து கொண்டதும், அவள் மனம் பூரித்தாள்!

''ஆ! அப்படியா? அப்படியென்ருல் உங்களுக்கென்னத்திற்கு, அக் கட்டுரைப் பிரதிகள்? நான் அவைகளை மற்றுமொரு முறை படிக்க வேண்டும்'' என்று சொல்லி அக்கட்டுரைப் புஸ்தகத்தை அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டாள்.

''உன் அப்பாவுக்குத் தெரிந்தால் ஆபத்தாக முடியும்'' என்று அவளை எச்சரித்தார் 'மணவாளன்' என்ற அந்த மணவாளப் பிள்ளை.

ஆனல் அவளா பயப்படுகிறவள்? காங்கிரஸை ஆதரிக்க வேண்டாம் என்று தன் மகளை கதிர்வேலுப் பிள்ளை இதுகாறும் எச்சரித்து வந்தது போக, இப்பொழுது அவர் தன் மருமகப் பிள்ளையையும் சேர்த்து எச்சரிக்கும்படியாக ஆகி விட்டது! ஏனெனில் மணவாளனுக்கு படிப்பு முடிவடைந்ததும், அவரால் எத்தனை நாள்தான் பகிரங்கமாக காங்கிரஸ் இயக்கங்களில் சேராமலிருக்க முடியும்? இது தன் மருமகனுக்கு உகந்த தல்ல என்று எண்ணி கதிர்வேலுவும், அவரை காங்கிரஸில் சேரவேண்டா மென்று எச்சரித்த வண்ண மிருந்தார். ஆனல் மணவாளனே அவைகளை இந்தக் காதில் வாங்கி அந்தக் காது வழியாக விட்டுவிட்டு, பொது ஜனங்களை, ''காங்கிரஸிலேயே சேருங்கள், மற்ற கட்சிகளைக் கண்டு மதிமோசம் போகாதீர்கள்'' என்று எச்சரித்த வண்ண மிருந்தார்.

ஆகையால் மாமனுருக்கும் மாப்பிள்ளைக்கும் கொள்கையிலும் கட்சியிலும் வித்தியாசமேற்பட்டதால், இருவரும் பிரிந்தனர். குணவதியும் தன் தந்தையைவிட்டு விட்டுத் தன் மணவாளனேடு போய் விட்டாள். 'மணவாள னுடைய கட்டுரைப் பிரதிகளோடு கூடத்தான்! தன் மகளின் குணத்தை மாற்றி

விட்டானே தன் மருமகப் பிள்ளை என்றிருந்தது கதிர் வேலுவிற்கு.

அவ்வப்போது மணவாளன் காங்கிரஸ் அலுவல் விஷயமாக வெளியே போக வேண்டி வந்தபோது மட்டும், குணவதியை தன் மாமனார் வீட்டிற்குக் கொண்டு போய்விட்டு விட்டு வந்தார். பிறகு ஒரு நாள் தந்தையின் தூஷணை அதிகமாகப் போகவே, அவள் தன் கணவன் வெளியூர் போனபோதும் தன்னந்தனியாகவே தன் வீட்டிலேயே இருக்க ஆரம்பித்தாள். கதிர்வேலுவிற்கும் கோபமதிகமாய்ப்போய் தன் மகளையும் வெறுக்க ஆரம்பித்தார்.

பிறகு ஒரு தடவை மணவாளன் ஆறுமாதங்கள் சிறையில் இருக்கும்படி நேர்ந்தது. காங்கிரஸ் இயக்கத்தினுல்தான்! அப்பொழுது தவிர்க்க முடியாமல் குணவதி தன் தந்தையின் வீட்டிற்குப் போகும்படி நேர்ந்தது. அவளுக்கும் அது ஒரு சிறையாகவே தோன்றியது!

அவர் சிறை சென்ற அந்த ஆறு மாதப் போதிலும், அவள் அவருடைய பிரிவைச் சகிக்க முடியாமலிருந்தாள். பிறகு வேதனை அதிகமாகிப் போகவே, மேலும் பொழுதும் போகாமல்ப் போகவே அவள் தன் மணுளனின் பெயரான "மணவாளன்" என்ற புனைப்பெயருடனேயே பத்திரிகைகளில் காங்கிரஸைப்பற்றி எழுதி வந்தாள். சிறையிலிருந்த மணவாளனுக்கு இரகசியமாக ஒன்றிரண்டு பத்திரிகை வந்தது. அதில் கண்டிருந்த "மணவாளன்" என்ற புனைப் பெயருடன் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தான் எப்பொழுது எழுதினேம் என்று அவருக்குப் புரியவேயில்லை!

பிறகு அவரும் சிறையிலிருந்து வெளியே வந்தார். கதிர்வேலுவிற்கு கிஞ்சித்தோ அல்லது சிறிதேனுமோ அவரைப் பிடிக்கவேயில்லை! தன் மருமகனுடைய அந்தஸ்துக்கு அது குறைவு என்று அவர் எண்ணினுர்.

தன் கணவனுடைய சிறைவாசமும், தான் தந்தை வீட்டில் அனுபவித்து வந்த சிறைவாசமும் நீங்கியதும் அவள் தன் கணவனேடு வசிக்க எண்ணினுள். ஆனுல் மறுபடியும் மணவாளன், தான் அத்தனை நாள் இருந்து வந்த இடத்திற்கே திரும்பிச் செல்லும்படியாக ஆகி விட்டது!

ஏனெனில், அப்பொழுது ஆகஸ்டு கலவரம் தீவிரமாக நடந்த சமயம். அதில் அவரும் சேர்ந்திருக்கிருரென்று அவரை மறுபடியும் ஜெயிலில் போட்டு விட்டார்கள். ஆனுல் இந்தத் தடவை சிறை

வாசம் மிகவும் கொடுமையானது. அவர் ஆறு மாதச் சிறைவாசம் அனுபவித்து விட்டு வெளியே வந்தபோது ஆகஸ்டு கலவரம் அப்பொழுதுதான் ஆரம்பத்திருந்தது என்பதே. அவர் இந்தத் தட்வை 'அரெஸ்டு' செய்யப்பட்டு சிறைக்குக் கொண்டு போகப்பட்டார் என்பதற்குப் போதுமான அத்தாட்சி!

ஆகையால், குணவதியும் தன் தந்தையின் இடத்திலேயே இருக்கும்படி நேரிட்டு விட்டது. கதிர்வேலுவிற்கும் அவர் மேலுண்டான கோபம் இன்னும் அதிகமாயிற்று. ஆகக் கூடி தன் மகள் ஒரு சுகத்தையுமடையவில்லை என்று எண்ணினார் அவர். என்ன காங்கிரஸோ, என்ன சிறை புகுதலோ என்று தோன்றியது அவருக்கு.

கணவனைப் பிரிந்து சதா கவலையுடன் காணப்பட்டாள் குணவதி. காங்கிரஸில் சேர்ந்தாலென்ன, இவ்வளவா கொடுமைப் பட வேண்டும் என்று தோன்றியது அவளுக்கு.

தந்தையின் கோபத்திற்கேற்றாற் போல் அவரும் சதா சிறை சென்றவண்ணமிருந்தாரே, என்று எண்ணி அவள் மனம் வெதும்பினாள். ஆனால் அவரா வேண்டுமென்றே சிறை சென்றார்? அந்தச் சிறைதானே தன் அகண்ட வாயிலைத் திறந்து கொண்டு அவரை "வா வா" வென்று வருந்தி அழைத்தது? தன் கணவன் பிரிவைச் சகியாமல், அவள் தானும் சிறை செல்ல எண்ணினாள். ஆனால் அவள் மனம் இன்னும் பக்குவமடையவில்லையென்று அவளை சிறை செல்ல வேண்டாமென்று மணவாளன் தடுத்திருந்தார். ஆனால் ஒருவிதத்தில் அவள் சிறை சென்றாலும் அவரைப் பிரிந்துதானே இருக்க வேண்டும். ஏனெனில், சிறையிலும் ஆண் சிறையென்றும், பெண் சிறையென்றும் பிரிவுக ளிருந்தனவே. ஆகையால் அவள் எப்படி அங்கே அவரருகிலேயே இருக்க முடியும்?

நாளாக ஆக கவலை மிகுதியினால் அவள் தேகம் மெலிந்தது. லேசான மஞ்சள் நிறத்துடன் வெய்யிலைப் போல் காணப் பட்டது அவளுடைய தேகத்தின் நிறம். வர வர அவளால் எதையாவது கூர்ந்து நோக்கவோ, அல்லது ஒரு கதையோ, கட்டுரையோ படிக்கவோ முடியவில்லை. இரத்தம் வெளிறிப் போய், ஒரு சோகப் பதுமையைப் போல் பட்டாள் அவள்.

தன் மகளின் கண்கள் வெளுத்தும், உடல் மெலிந்தும் காணப்பட்டதைக்

கண்டு கதிர்வேலுவிற்கு மனம் வெதும்பியது. இந்தப் பாழும் மணவாளப் பிள்ளைக்குக் கொண்டு போய்க் கொடுத்தோமே நம் மகளை என்றிருந்தார் அவர்.

நாளாக ஆக அவள் தேகம் மெலிந்து குச்சி போல் ஆவதைக் கண்டு கதிர்வேலு கவலையிலாழ்ந்தார். இப்பொழுது அவளை அவர் கோபித்துக் கொள்வது மில்லை. அவள் உடம்பு தேறினல் போதுமென்றிருந்தார்.

கவலை மிகுதியினலும், மகளின் பேரிலுள்ள அன்பினலும் அவர் கூப்பிட்டுக் காண்பிக்காத டாக்டர்கள் கிடையாது. இங்கிலீஷ் வைத்தியம், நாட்டு வைத்தியம், 'ஹோமியோபதி' முறை என்ற எல்லா வைத்தியத்தையும் பார்த்து விட்டார் அவர்.

சோக மிகுதியினல் அவள் ஹிருதயம் உளுத்துக் கிடந்தது. தேகம் மெலிவுற்றுக் கிடந்தது. 'பீரோ' நிறைய மருந்துகள் வாங்கி நிரப்பினதுதான் மிச்சம். அவள் உடல் தேறவே இல்லை. தந்தை இருக்கும்போது மட்டும் வேண்டா வெறுப்புடன் மருந்தைக் குடிப்பாள். மற்ற சமயங்களில் அவ்வகளை அப்படியே தூரக் கொட்டி விடுவாள்.

அந்த மருந்துகளையும் சரிவரக் குடித்திருந்தால் கூட அவள் உடம்பு தேறுதுபோலிருந்தது. ஏனெனில், அம் மருந்துகள் உடல் நோயைத் தீர்க்கத்தான் சிறிது சக்தி பெற்றிருந்தனவே ஒழிய, அவளுடைய மனேவியாதியைத் தீர்க்கவல்லனவாக இல்லை.

3

இப்படி இருக்க தற்பொழுதுதான் மணவாளப் பிள்ளையும் விடுதலை யடைந்து வெளியே வந்தார். குணவதியும் உடல் குன்றியே கிடந்தாள். அவள் தேக நோயுற்றிருக்கிறளே என்று எண்ணி அவள் இன்னும் சிறிது காலம் அவளுடைய தந்தையின் வீட்டிலேயே இருக்கட்டும் என்று எண்ணிப் பேசாமலிருந்தார். அப்படியே அவளுக்கு ஒரு கடிதமும் எழுதிப் போட்டார். குணவதியால் அப்போதிருந்த நிலையில் அக்கடிதத்தைக் கூடச் சரியாகப் படித்துப் புரிந்துகொள்ள முடியவில்லை. அவ்வளவு பலஹீனமாக இருந்தது அவள் தேக நிலமை.

கதிர்வேலுப் பிள்ளைக்கும் தன் மருமகனிடம் சற்றும் கோபம் தணியவே இல்லை. அவர் விடுதலை அடைந்த அன்று குணவதி அவரை எதிர் கொண்டு அழைக்கப் போகக் கூடாது என்று சொல்லி அவளைத் தடுத்திருந்தார். தவிரவும் குணவதி

யால்தான் தன் தேகமிருந்த நிலையில் எழுந்து எங்கே போக முடியும் ? ஆகையால் அவர் விடுதலைச் செய்தியை யும், அவர் 'போட்டோ' வை மட்டும் பத்திரிகையி லிருந்து தெரிந்து கொண்டு மகிழ்ந்தாள்.

என்ன இருந்தாலும், மண வாளனும் ஆண் பிள்ளை தானே? தன் மனைவி விடுதலை யன்று வராததால், அவருக் குக் கோப மெழுந்தது. மேலும், தான் ஒரு அடாத செய்கையில் சிறையில் தள் ளப்பட் டிருந்தாலும், கதிர் வேலுவின் கோபம் தணி யாததைக் கண்டு அவருக் கும் கோபமூண்டது.

பிறகுதான் தன் தேக நிலை மை மோசமாகி இருக்கிற தென்று தெரிந்து கொண் டார். பிறகு அவள் தேக நிலையைக் கவனித்துக் கொள் ளும்படி மாத்திரம் ஒரு கடித மெழுதிப் போட்டு விட்டுப் பேசாதிருந்து விட்டார்.

மேலும் விடுதலை அடைந்து வந்தவுடனேயே அவர் காங் கிரஸ் விஷயங்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டதால், தன் நோயாளியான மனைவியைப் போய்க் காண முடியவில்லை. இத்தனை நாள் பொறுத்து விட்டு, இன்னும் கொஞ்ச நாளா பொறுக்க முடி யாது ? அஹிம்ஸா தர்மத் தையே கடைப் பிடித்த அவ ருடைய பொறுமைக்கா கேட்க வேண்டும் ? மேலும் அவளுடைய தற்போதைய தேக நிலையைக் கவனித்திருந் தால்கூட அவருக்கு ஒரு வேலையும் ஓடி யிருக்காது.

இப்படி யிருக்க மாகா ணத் தேர்தலும் நெருங்கி யது. அதில் மணவாளப் பிள்ளை கலந்து கொள்ளாம லிருப்பாரா ?

இது ஒரு புறமிருக்க, தேர் தலுக்காக கதிர்வேலுப் பிள் ளையும் தீவிர முயற்சி எடுத் துக்கொண் டிருந்தார். எதிர்க் கட்சியின் எதிர்ப்பும், தீவிர முயற்சியு மில்லாமல்தான் காங்கிரஸ் எப்படி புகழையும் வெற்றியையும் அடைய முடி யும் ! எப்பொழுதும் போ லவே அவர் இந்தத் தடவை வையும் தேர்தலுக்கு முன்பே காங்கிரஸைத் திட்ட ஆரம் பித்தார். இதனால் இந்தத் தடவையும் அவருக்குத் தோல்வி நிச்சய மென்பது திண்ணம் ! ஆதலால் கோப மடைந்த மணவாளனும் மனைவியைப் பார்க்க வேண்டு மென்றிருந்த ஒரு அவாவை யும் தணித்துக் கொண் டார்.

தன் மனைவியின் உடல் நிலை மெலிந்திருந்தது போல், சென்ற சில வருஷங்களாக தேசத் தொண்டர்கள் சிறை சென்றிருந்தமையால் சோர் வுற்றுக் கிடந்த காங்கிரஸ் கட்சியை புனருத்தாரணம் செய்ய ஆரம்பித்தார்.

இரு சொட்டுக் கண்ணீர்

வீ. குமாரசுவாமி.

அன்று 'பொருநை' நதியில் ஒரே வெள்ளம். இரு கரைகளைத் தழுவிக் கொண்டும், பல கிராமங்களைப் பார்வையிட்டும் சென்றுள் அந்நதிக் கன்னிகை.

கரையில் நின்று கொண்டு, அக்கன்னிகை, செல்லும் வனப்பையே கவனித்துக் கொண்டிருந்த நான், பெண்ணின் குரலொன்றுல், பின் பக்கம் திரும்பினேன்.

"அதோ! பாரம்மா! அக்கரைகிட்ட ஒரு தோணி தெரியுது பாரு" என்றுள் அவள்.

அச்சொற்கள் மிக இனிமையாக இருந்தன, சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்வதுபோல.

அவளைக் கூர்ந்து கவனித்தேன். என் பக்கமாகவே வந்து கொண்டிருந்தாள்.

அவளுக்கு வயது பதினெட்டு கூட இராது. இளமையின் பொலிவைத் தாங்கி நின்றது அவளது தேகம். அவளுடன் துணைக்கு வந்திருந்தாள் ஒரு குருட்டுக் கிழவி.

மிக சமீபத்தில் அவர்கள் வந்ததும், அந்தக் காரிகையை

நன்ருகக் கவனித்தேன். ஆகா! என்ன வசீகரமான முகம்!! அவளும் என்னைப் பார்த்தாள். நானும் பதிலாக......!

என் பார்வையிலே என்ன தான் இருந்ததோ, தெரியவில்லை. 'களுக்' கென்று சிரித்தாள் அவள்.

"அம்மா! நீங்களெல்லாம் எந்த ஊருக்குப் போறீங்க?" என்றேன் அவளைப் பார்த்து!

"நாங்களெல்லாம், 'கலைக்கூட்டம்' போறவங்க! நீங்க எந்த ஊருக்கு?"

"நானும் அங்கேதான் போகவேண்டும்" என்றேன்.

எனக்கு ஒரு விதத்தில் மகிழ்ச்சி; இதுவரை அந்த ஊருக்குப் போனதே கிடையாது. எனக்கு வேலைகிடைத்தது முதல் அந்தக் கூட்டுறவு பண்டகச்சாலையை பார்வையிட வசதியே ஏற்படவில்லை.

கொஞ்சநேரத்தில்,தோணியும் எங்கள் பக்கம் வந்துவிட்டது.

"ஐயா! ஏறிக்கிங்க, நாங்க, உங்க, பின்னுலே குந்திக்கிருேம்" என்ருள் இனிமை ததும்ப.

'சரி' என்பதின் அடையாளமாகத் தலையை அசைத்தேன்.

2

படகும் புறப்பட்டது. பெண், பெரிய வாயாடி போலிருக்கிறது. பேச்சை ஆரம்பித்தாள்.

"நீங்க, அந்த ஊருக்குப் புதிசுங்களா?"

"ஆமாம்.....கலைக்கூட்டம் அக்கரையிலிருந்து ரொம்பத் தூரத்தில் இருக்கிறதோ?" என்றேன் நான்.

"சரியாப் போச்சு! தோணியை விட்டு இறங்கி ஏழு மைல் தூரங்க நடக்கணும்."

"ஏதாவது வண்டி......"

"ஐயோ! மவராசங்க! வண்டி...கால் வண்டிதான்," என்று சொல்லி, என்னைப் பார்த்து ஒரு குறும்புச் சிரிப்புச் சிரித்தாள்.

அதில் எத்தனை பொருட்கள்தான் அடங்கியிருந்ததோ தெரியவில்லை! என்னையுமறியாமல், எனது அதரங்கள் மெதுவாக "குறும்புக்காரி" என முனகின.

வெள்ளத்தின் போக்கால், தோணி ஒரு பக்கமாக சாயப் பார்த்தது. அப்பொழுது அவளுடைய எழில் நிறைந்த, அந்த இளம் உடல், எனது தேகத்தின் மீது பட்டவுடன், எனது உணர்வையே இழந்தவன் போலானேன்.

அக்கரையும் வந்தது. தோணியை விட்டிறங்கி நடை வண்டியை ஓட்டஆரம்பித்தோம். அழகான, இயற்

கைக் காட்சிகள் நிறைந்த காட்டுடே, அப்பாதை சென்றது. வழி நெடுக அழகான காட்டு மலர்கள் கவனிப்பாரின்றி "பூத்துக் குலுங்கி புது மணம் பரப்பி" நின்றன.

போகிற போக்கிலே, "உன் பேரென்ன?" என்றேன்.

"அதுதான் செல்லிங்க!"

என்னையும் அவள் கேள்வி கேட்காமல் விடவில்லை.

"ஐயா! எங்க ஊருக்கு வர்றது எந்தக் காரியங்களோ?"

"செல்லி.........நான் ஒரு ஆடிட்டர்...உங்க ஊரிலே 'ஸ்டோர்கடை' இருக்குபாரு, அதைப்போய்ப் பார்க்கணும்" என்றேன் நான்.

"என்னுங்க! அந்த 'ஸ்டோர்க் கடையை' பார்க்கவா, இவ்வளவு கஷ்டப்பட்டு வர்ரீங்க!...நல்லா பார்த்துட்டுப் போங்க..." என்ருள் குறும்புடன்.

ஊர் சமீபத்ததால் அவளும் பிரிந்தாள். நானும் 'ஸ்டோரை' நோக்கி நடக்கலானேன். பிரியும்போது அவள் பார்த்த பார்வை "என்னை மறந்து விடாதீங்க" என்று சொல்லுவது போல இருந்தது!

3

'கலைக் கூட்டம்' என்பது கடற்கரைப்பக்கம் அமைந்த சிற்றூர். அந்தவூர் மக்களுக்கு மீன் பிடிப்பதே முக்கிய தொழில்.

அன்றுமாலை கடற்கரைப் பக்கம் சென்றேன். ஆமாம், அங்கு செல்லிதான் நின்று கொண்டிருந்தாள்.

'கண்டதும் காதல்'......... என்பது எங்கள் விஷயத்தில் உண்மைதான்.

"செல்லி! என் தன்னந் தனியாக இந்த இடத்தில் நிற்கிருய்?" என்றேன் பக்கத்தில் சென்று.

"சும்மாத்தான் நிற்கிறேன். அதோ! பாருங்க, ஒரு வள்ளம் (படகு) தெரியுதுங்களா! அதிலேதான் என் அப்பாரு வர்ராரு. காலங்காத்தாலே மீன் புடிக்கப் போயிட்டாருன, பொழுது சாஞ்சுதான் திரும்புவாரு. எங்க வூட்டு வேலை பூராவும் நான்தானுங்க கவனிக்கணும். எங்க ஆயாவுக்குக் கண்ணு தெரியாதுங்க! ரொம்பக் கஷ்டப் படுரேனுங்க" என்று வீட்டு இராமாயணத்தை ஆரம்பித்து முடித்தாள்.

"பாவம்! குடும்பம்...ஞ... அப்படித்தானே, செல்லி! நீ, கவனிக்காதுபோன யார் கவனிப்பாங்க?" என்றேன் நான்.

கரு, கரு வென்று இருட்ட ஆரம்பித்தது. இருவரும் பிரிந்தோம்.

அந்த வூரை விட்டு எனது இருப்பிடத்திற்கு இரண்டு தினங்கள் கழித்துத் திரும்பினேன்.

காலக் கரையிலே ஆறு மாத அலைகள் மோதின. பழையபடியும் அவ்வூருக்குச் சென்றேன்.

அன்றைய தினம் மாலை நேரம். அதே கடற்கரையில் நின்று கொண்டிருந்தேன். பொழுது போக்காக கடல் ஓரமாக நடக்க ஆரம்பித்தேன்.

கொஞ்ச தூரத்தில் ஒரு வள்ளம் கரையில் கிடந்தது. அதில் உட்கார்ந்திருந்தான் ஒரு மீசை வைத்த ஆசாமி. பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள் செல்வி.

என் மனதில் நிம்மதியே இல்லை. "செல்வியின் கணவனாக இருக்கலாமோ! அப்படியானல் அவளை விரும்புவது வீண்தானே?" என்றெண்ணியது எனது பேதை மனம்.

பக்கத்தில் சென்றேன். "ஐயா வாருங்க!" என்றாள் தலைகவிழ்ந்தவாறே.

"செல்வி! இது யாரம்மா?"

"இது தானுங்க என்தம்மையனுரு! பேரு கந்தய்யா" என்றாள் செல்வி. அவன் என்னை ஒரு முறை 'விறைப்பாக'ப் பார்த்தான். அதை அறிந்த அவள், "அண்ணே, நீ வீட்டுக்குப் போய், கஞ்சிக் கலயத்தை வச்சிட்டு வா! நான் பின்னுலே வரேன்," என்று சொல்லியதுதான் தாமதம் அந்த 'ஜடம்' இடத்தை விட்டு வேகமாக நடந்தான்.

"செல்வி..." என் உள்ளத்தில் உணர்ச்சி வேகத்தில் எழுந்த சொல்.

அவளும் எனது உள்ளத்தை அறிந்தாள். "ஐயா உங்களுக்கு வள்ளத்திலே போறது இஷ்டந்தானுங்களா? நம்ப ரெண்டுபேரும், கடல்லே கொஞ்சத் தொலவு போயிட்டு வருவோமா?" என்று அவள் சொல்லியவுடன், நானும் சம்மதித்து வள்ளத்தில் புறப்பட்டேன்.

ஆனந்தமான மாலை நேரத்திலே கடற்காற்று வீசுவதும், கடல் அலைகள் கொந்தளிப்பதும் எனக்கு மிக இன்பமாக இருந்தது.

"செல்வி! உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?" என்று பேச்சை ஆரம்பித்தேன்.

"கல்யாணங்களா! அதுதான் ஆகலீங்க. எங்க குடும்பத்தைக் கவனிக்கணுமே! நான், எங்க ஆயாவை விட்டுப் பிரிஞ்சுட்டேன்னு அவங்க பாடு திண்டாட்டம்

தானே! அதனாலே பின்னாடி பார்த்துக்குவோம்னு நினைச்சிருக்கேன். ஆனால் எங்க அப்பாரு, என் மச்சான் ராமனைக் கட்டிக்கோன்னு வாதாடுராரு! அவரு ரொம்ப மோசமாயிருப்பாரு. கறுப்புன்னா அண்டங்கரிதான். எனக்கு அவரைப் புடிக்கலீங்க......" என்று சொல்லி, கண்ணீர் விட்டாள்.

அவளது நிலைமைக்குச்செவி சாய்ப்பதுபோல, அலைகள் எங்கள் வள்ளத்தை நோக்கி விரைவாக அடித்தன.

"செல்வி!...நாம் இப்படிப் போவதைப் பார்த்தால், யாராவது ஏதாவது நினைப்பார்களே!" என்றேன்.

"என்ன! சொன்னீங்க ...ஆமா...அவங்க பார்த்து என்ன செய்ய முடியும்...?" என்று சொல்லியவாறே, அவளது தலையை என் மார்பில் சாய்த்துக் கொண்டாள்.

இருட்டிவிட்டதால் கரையை நோக்கி வள்ளத்தைத் திருப்பினோம்.

கடற்கரையை விட்டுப் பிரியும் போது, "என்னைக் கல்யாணம் கட்டிக்கிவிங்களா" என்று அவள் உணர்ச்சியில் சொன்ன வார்த்தைகள் என் மனதை விட்டு இன்னும் அகலவில்லை.

காலச் சுழலில் நானும் திருச்சி ஜில்லாவிற்கு மாற்றப் பட்டேன்.

சந்தர்ப்பத்தின் சதியால் ஒரு தடவை 'கலைக்கூட்டம்' சென்றேன். எதற்காக? எனது 'செல்வி' யைப் பார்க்கத்தான்.

கடற்கரையில் நின்று கொண்டிருந்தேன். தற்செயலாக, 'செல்வியின் அண்ணனைச் சந்தித்தேன். "எங்கேப்பா உன் செல்வி? கல்யாணம் ஆகி விட்டதா?"

"ஆகலீங்க! அது பெரிய கதை! எங்க அப்பாரு அவளை எங்க மச்சான் ராமனுக்கு கல்யாணம் செய்து கொடுக்கணுமினு, 'ஒத்தைக் காலால்' நிண்ணாருங்க! அவ இஷ்டப் படலை. பிறகு என்னவோ 'காயலா' ப் படுத்தாங்க!... காய்ச்சலு சமயத்திலே... ஆடிட்டரு..ஆடிட்டருன்னு புலம்பினாங்க சாமி!......அப்படின்னா என்னாங்க அர்த்தம்" என்று என்முகத்தைப் பார்த்தான்.

என் கண்களில் நீர் தேங்கியிருந்தது.

"ஆமாம்! துரோகம் செய்து விட்டோம்!...பெண்ணின் வாழ்க்கையை கெடுத்து விட்டோம்" என்றெண்ணியது என் இதயம்.

கடல் அலைகள் அமங்கல கீதம் பாடுவதுபோல், மிக விரைவாக அடித்தன.

எனது கண்கள் இரண்டு சொட்டுக் கண்ணீரை உகுத்தன!

அவள் யார்?

வி. என். சம்பந்தம்

தீபாராதனை முடிந்தது. வந்திருந்த வனிதாமணிகளும் கலைந்தனர். சங்கத் தலைவி மட்டும் அங்கே இருந்தாள். நானும், விடைபெற்று வீட்டுக்குப் போக எத்தனித்தேன். "போய் வரட்டுமா?" என்றும் கேட்டேன். அடுத்த வாரம் அடிகளின் விழாவை, ஆடம்பரமாகக் கொண்டாட வேண்டுமென்றும், அதற்கு என் உதவி அவசியம் தேவையென்றும், அன்பான முறையில் இன்பமான சொல்லால் சொன்னாள் சங்கத் தலைவி.

அன்பிற்கு இரங்காத நெஞ்சமும் உண்டா...? "ஆகட்டும்" என்றேன். விடைபெற்றுச் சென்றேன்.

ஒரு விதமாகக் கழிந்தது ஒரு வாரம்.

எனக்கு அன்று ஓய்வுதான். அந்த நேரத்திலாவது ஆண்டவன் சேவையில் ஈடுபடலாம் என்று நினைத்தேன் வெள்ளிக்கிழமையும் துள்ளி வந்தது. மெள்ள நடந்தேன் சங்கத்தை நோக்கி. என்னையும் அறியாமல், சங்கத்தின் வாசலை நெருங்கின என் கால்கள்.

கூழை எதிர்பார்த்து நிற்கும் ஏழைக்கு, சோறு கிடைத்தது போல, சொல்லொணாத இன்பத்தில் ஆழ்ந்தது என் இதயம். வாசலின் முன் தொங்க விட்டிருக்கும் தோரணங்கள், அங்கு வருவோரை அன்போடு வரவேற்பது போல அசைந்தாடின காற்றில். ஆலை இயந்திரம் போல ஓலமிட்டன மேளதாளங்கள். பன் மார்க்கமாக வரும், எம் மார்க்கத்தவரையும், பலமாக அழைத்தது பட்டொளி வீசும் சன்மார்க்கக் கொடி. களங்க மற்ற காதலர்கள் உள்ளம் போல, பளிங்கினும் மேலாக இருந்தது அதன் நிறம்.

ஏக காலத்தில் இவைகளைக் கண்ட எனக்கு, எங்கிருக்கிறேன் என்றுகூடத் தோன்றவில்லை. ஆஹா...! சுருக்கமாகச் சொன்னல்—ஸ்வர்க்கம் என்று ஒன்று இருப்பது உண்மையானல் — இப்படித்தான் இருக்கும் என்று தீர்ப்பளித்தது என் நெஞ்சு... கதிரவனைக் கண்ட கமலம் களிப்படைவது போல, வாசலின் அலங்காரங்களைக் கண்ட எனக்குப் பாசம் அதிகரித்தது சங்கத்தின்மேல். அளவற்ற ஆனந்தத்தால் அடியெடுத்து வைத்தேன். ஒரு விதமாக உள்ளே நுழைந்தேன். ஒரு பெருத்த சந்தேகத்தில் என் கருத்து மூழ்கியது.

சங்கத்திற்குத்தான் வந்திருக்கிறேமா...? அல்லது, கலைவாணி தன் தோழியருடன் களித்திருக்கும் கலா பீடத்திற்கு வந்திருக்கிறேமா? என்று இரு வகையாக எண்ணிற்று என் உள்ளம்.

"வா மூர்த்தி" என்று அருகிலிருந்து வந்த குரல் என் சந்தேகத்தை நிவர்த்தி பண்ணிற்று. மறுபக்கம் திரும்பினேன். மலர்ந்த முகத்துடன் மரியாதையாக வரவேற்ருள் சங்கத் தலைவி. குறிப்பிட்ட இடத்தில் குந்தினேன். அங்கிருந்த அனைவர் பார்வைகளும் என்மேல் விழுந்தன... இது எனக்கு ஒரு நாணத்தை உண்டாக்கிற்று. ஒரு வகையாக சமாளித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தேன்.....ஒழிந்தது ஒருசில நிமிஷங்கள்...

அங்குள்ளோர் சிலர், குறுக்கும் நெடுக்குமாக ஓடிக்கொண்டிருந்தனர். இத்தனை நேரம் ஓய்வாக இருந்த மேளதாளங்கள் ஆரம்பித்து அலறின......மேலும், சில பெண்கள் வந்து சேர்ந்தனர். வந்தவர்களை வரவேற்பதும் நட்பு முறையைக் கொண்டாடுவதுமாக ஒருவரை ஒருவர் சந்தித்து உசாவிக்கொண்டிருந்தனர். எனக்கு அறிமுகமான இரண்டொருவர் மட்டும், என்னுடன் பேசிக்கொண்டிருந்தனர்.......இதற்கிடையில், அடிகளின் பூஜைக்கு ஆவன செய்யும் சங்கத் தலைவி, அங்கும் இங்குமாக ஓடிக்கொண்டிருந்தாள். குறிப்பிட்ட நேரமும் வந்தது. பூஜை ஆரம்பமாயிற்று. அச் சங்கத்தின் லட்சிய புருஷனை வடலூர் அடிகளின் உருவம், சுடர்விட்டு ஜொலித்தது கூடத்தின் ஜோதியால். அனைவர் முகத்திலும் பக்தியின் உச்சநிலை பிரதி பலித்தது. அதிலும் சில பெண்களின் கண்களிலிருந்து, ஆனந்தக் கண்ணீர் அருவி போல் பெருகிற்று. அடிகளின் உருவம் என்னை அமர நிலைக்குக் கொண்டு விட்டது. எங்கிருந்தோ ஒரு புத்துணர்ச்சி என் அங்கம் பூராவும் பரவிற்று. எல்லையற்ற இன்

பத்தில் இரண்டரக் கலந்தது இதயம். மெய்மறந்து நின்றிருந்தேன்...பூஜையும் முடிந்தது. எனது ஆழ்ந்த நினைவை அகலச்செய்தது அருகிலிருந்த சங்கத் தலைவியின் குரல்...

என்னிடம் அவர்கள் எதிர்பார்த்த—எனக்கும் பிரியமான என் உதவி ஆரம்பமாயிற்று...என் பிஞ்சு அறிவிற்கு எற்றாற்போல், கொஞ்ச நேரம் பேசினேன் மிஞ்சிய புகழ் பெற்ற அருட்பாவின் பெருமைபற்றி. எதிரில் அமர்ந்துள்ள எல்லாப் பெண்மணிகளின் கண்களிலும் என் உருவம் காணப்பட்டது.

அவர்கள் முகத்தில் தவழும் தனிச் சோபையிலிருந்து, என் பேச்சு அவர்களுக்கு இன்பூட்டிற்று என்று யூகித்தேன்...அருகிலிருந்த அம்மையின் வேண்டுகோளின்படி, எனக்குத் தெரிந்த இரண்டொரு பாடல்களைப் பாடினேன்...வாயில் ஈ நுழைவதைக்கூடக் கவனியாமல் என்னையே கவனித்துக் கொண்டிருந்தனர் எல்லாப் பெண்மணிகளும். கூட்டத்திலிருந்து "ஆஹா" "என்ன இனிமை' என்ற துண்டு வார்த்தைகள் கிளம்பி என் செவிகளில் நுழைந்தன...

மூன்றாவது பாட்டும் முடிந்தது. எங்கிருந்தோ ஒரு குரல் "இன்னொன்று" என்றது. அடிகள்மேல் பாடுவதில் எனக்கும் ஆர்வம் அதிகமாதலால் "கையறவிலாத நடுக்கண் புருவப் பூட்டு" என்ற பாடலைப் பாடி முடித்தேன்...

இடையில் என்னையுமறியாமல், இடது பக்கத்தை எட்டிப் பார்த்தன என் கண்கள். திடீரென்று ஓர் உற்சாகம் உடலில் புகுந்தது. யாரோ ஒரு பெண்மணி, என் பாட்டிற் கேற்ப தாளம் போட்டுக்கொண்டு, பாடலை அபாரமாக ரஸித்துக் கொண்டிருந்தாள்......அவ்வளவு பெண்களுக் கிடையே அவள் மட்டும் அலாதியாக ரஸிப்பதைக் கண்ட எனக்கு மேலும் பாடத் தோன்றிற்று. அதற்கேற்ப அருகேயுள்ள சங்கத் தலைவி தூண்ட, என் சொந்தக் கற்பனையான,

"ஜாதி மத பேதங்கள்
சற்றும் இல்லாத வள்ளல்
வீதியில் வந்தானடி-சகியே
வேட்கை யளித்தானடி"

என்ற பாடலைப் பாடினேன். அனைவர் முகத்திலும் அளவுக்கு மிஞ்சிய ஆனந்தம் அபிநயம் பிடிக்க ஆரம்பித்தது... ஒருவிதமாக என் உதவியும் நிறைவேறிற்று. வழக்கப்படி பிரசாதம் பெற்று பெண்மணிகள் விடை பெற்றனர்...இறுதியாக நானும், விடைபெற்று வீட்டை நோக்கி நடந்தேன்.

* * *

அன்று அமாவாசை தினம். காலை சுமார் எட்டு மணிக்கு ஆலயத்தை நோக்கி

நடந்தேன்......ஆலயத்திற்குப் போகும்போது ஆழ்ந்த சிந்தனையில் மிதந்தது என் மனம் பரீக்ஷையின் முடிவு என்ன ஆகுமோ என்று. என் பின் பக்கமாக வந்த ஒரு புதுக் குரல் என்னை சிந்தனையினின்றும் பிரித்தது. நோக்கி வருவதாகக் கண்டேன். இன்னான் என்று அறிந்து கொள்ள முடியவில்லை...என்னை நெருங்கினன். அவனுடைய குறுகுறுப்பான பார்வை அவனுடைய சுறுசுறுப்பை அறிவித்தது. "அக்கா கூப்பிடுகிறது" என்று அழைத்தது என் மனதில் ஏதோ சந்தேகங்களைக் கிளப்பி விட்டது. எப்படியெல்லாமோ யோசித்து ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை. சற்று நிதானித்து "நீ யார்?" என்றேன் அவனை. "எங்க அக்காவுக்குத் தம்பி" என்று மழலை மொழியில் பதிலுரைத்தான் பையன். இந்த பதில், நகைப்பையும், திகைப்பையும் ஒரே நேரத்தில் உண்டு பண்ணிற்று. அவனிடமிருந்து எதையும் புரிந்து கொள்ள முடியாததால், மனதை ஒருவாறு தைரியப்படுத்திக் கொண்டு திரும்பிச் செல்ல எண்ணினேன்.

பையனின் கையைப் பிடித்துக் கொண்டு அந்த, 'அக்கா' வின் வீட்டை நோக்கி நடந்தேன். "அக்கா" என்று கூவிக்கொண்டே எக்காளத்தோடு உள்ளே ஓடி விட்டான் பையன்.

அடுத்த நிமிஷம், கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல் உருவம் என் முன்னே நின்றது. உருவத்தைக் கண்ட என் உள்ளம் ஒன்றுந் தோன்ருது திகைத்தது.

ஆனல், இவ்வுருவம் இதற்கு முன் என் பார்வையில் விழுந்திருக்கிறது என்ற ஞாபகம் மட்டும் தோன்றிற்று. நிச்சயிக்க முடியவில்லை. "வாருங்கள்" என்று அழைத்தாள் அவ்வனிதாமணி. மெல்லவும் மாட்டாமல் விழுங்கவும் மாட்டாமல், மெல்ல நடந்தேன் உள்ளே. ஒரு திகைப்பு. எனக்கெதிரில் என்னுடைய உருவம் காட்சி யளித்தது. நான் அசையும் போது அதுவும் அசைந்தது. நான் சிரிக்கும் போது அதுவும் சிரித்தது. நிதானித்துப் பார்த்ததில் எதிரில் இருந்தது பளிங்குச் சுவர் என்று தெரிய வந்தது. இத்தனை அழகாக அமைக்கப்பட்டிருந்தது அந்தக் கூடம்.

பெண்களிடம் பேசியறியாத எனக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. எனக்குச் சாதகமாக, அருகிலிருந்த கட்டிலைக் காண்பித்து, "அமருங்கள்" என்ருள் அம் மங்கை. ஆஹா...! அக் குரலில் தான் என்ன இனிப்பு! கட்டுமீறிய அன்பு கலந்திருந்தது அக் குரலில். அட்டிப்

208428

பேசாமல் கட்டிலில் அமர்ந்தேன். எக் காரணத்தாலோ என்னைத் தனியே விட்டு உள்ளே சென்றுள் அம்மாது. இன்னும் அவளைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

சென்ற மங்கை வந்து நின்றுள். வஞ்சமற்றவர் நெஞ்சம் போல, நெஞ்சுடர் வீசும் ஒரு மஞ்சள் டம்ளரை என்பால் நீட்டினுள். என்பால் வந்த டம்ளரில் பசும்பால் காணப்பட்டது. வேண்டுகோளுக் கிணங்கி, பாலைப் பருகினேன். அடடா! நானும் எவ்வளவோ பாலைப் பருகியிருக்கிறேன். ஆயினும் என்பால் கொண்ட அன்பால் அப் பெண்பால் அளித்த பசும்பால் ஒரு தனிச் சுவையுடனிருந்தது. சில பழங்களையும் உரித்து உள்ளே தள்ளினேன். எங்கள் அன்பான சம்பாஷணை ஆரம்பமாயிற்று.

"எங்கே புறப்பட்டீர்கள்......?"

"ஆலய தரிசனத்திற்கு..."

"அதற்கு அங்கே செல்வானேன்...?"

"பிறகு...?"

"ஆலயத்தை, வீட்டிலிருந்து கொண்டே தரிசனம் பண்ணலாமே..."

"ஆலயத்தை தரிசிப்பதற்கல்ல... ஆண்டவனைத் தரிப்பதற்கு..."

"ஒஹோ...! ஆலய தரிசனம் என்றதும், கோவிலை தரிசிக்கத்தான் புறப்பட்டீர்களோ என்று, குறிப்பறியாமல் சொல்லிவிட்டேன், மன்னித்துக் கொள்ளுங்கள்..."

"அது சரி...., என்னை ஏன் அழைத்தீர்கள்...?"

"ஒன்றும் தெரியாதவர் போல் பேசுகிறீர்களே...?" என்று அந்தரங்க நண்பனைப் போல் அளவளாவினுள் அம் மங்கை.

இத்தனை நேரம் ஆகியும், அவளை நான் யார் என்று புரிந்துகொள்ள முடியவில்லை. அவளுடைய சம்பாஷணையின் கருத்தையும் அறிந்துகொள்ள முடியவில்லை. "அறிமுக மில்லாத ஒரு பெண், ஒரு ஆடவனேடு இப்படி அளவளாவுவதின் அர்த்தம் என்ன" என்ற சந்தேகம் மட்டும் என் மனதில் பதிந்துவிட்டது. நிலைமையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு மறுபடியும், "ஏன் அழைத்தீர்கள்..?" என்றேன். என்னுடைய கேள்விக்குப் பதிலாக 'என்னை மன்னியுங்கள்...' என்றுள். முன்னுக்குப் பின் முரணுன இவ் வார்த்தை, என் சந்தேகத்தை அதிகப்படுத்திற்று. ஊமையன் கனவு கண்டது போல ஒன்றுந் தோன்றுதிருந்தேன். எவ்வகையிலும், எனக்கு அறிமுகமில்லாத அம் மங்கை, என்னை வரவேற்று, "மன்னியுங்கள்" என்றது என்ன வெல்லாமோ உட்கருத்தை உணர வேண்டு

மென்று உறுத்திற்று என் உள்ளம்.

நிமிர்ந்த முகத்துடன், "எதற்காக மன்னிப்பது" என்றேன். அடுத்த விநாடி, என் கேள்விக்குப் பதில் சொல்வது போல் 'கலகல' வென்று வெளி வந்தது அவளுடைய கண்ணீர்த்துளி. கண்ணீர்த் துளியைக் கண்டதும் என் சந்தேகம் இன்னும் அதிகரித்தது. உள்ளமும் சற்று உருகிற்று. "எதற்காக அழுகிறீர்கள்?" என்று இரக்கமான தொனியில் கேட்டேன். அதற்கும் "என்னை மன்னியுங்கள்" என்ற பதிலே வந்தது. இன்னும் அவளுடைய நோக்கத்தைஅறிந்துகொள்ள முடியவில்லை.

எங்கள் சம்பாஷணையை ஆமோதிப்பது போல, எதிரிலிருந்த கடிகாரம் "டங்-டங்" என்று பத்து அடித்தது. வீட்டிற்குப் போக வேண்டும் என்ற வேகத்தாலும், "மன்னிக்கிறேன். என்ன விஷயம்?" என்றேன். இந்த இரண்டு வார்த்தைகளும், அவள் கண்ணீரைத் துடைத்தது, முகத்தில் களிப்பைக் கிளப்பியது. அன்று மலர்ந்த செந்தாமரை போல அலாதியான சோபையுடன் ஜொலித்தது அவள் வதனம். அவளுடைய அபாரமான அழகை அப்போது தான் அறிய முடிந்தது. அவளுடைய கருத்து ஒருவாறு புரிந்தது. இருந்தாலும், நிச்சயிக்க முடியவில்லை. கணவனைப் பிரிந்த காரிகை உள்ளம் போல கலகலவென ஆடிற்று அவள் காதணி. தங்கத் தாம்பளத்தின் நடுவே, வைரக் கல் பதித்தது போல சுடர் விட்டு ஜொலித்தது அவள் மூக்கணி. இளம்பாளை வெடித்தது போன்ற புன்முறுவலுடன் என்னை நோக்கினாள். என்னவோ சொல்ல வாயெடுத்தவள், நாணத்தால் தலை குனிந்தாள். இன்னும் அவளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. மறுமுறையும், "என்ன விஷயம்?" என்றேன்.

நாணத்தையும் பொருட்படுத்தாமல் "நான்........." என்று இழுத்தாள். இத்துடன் துண்டு வார்த்தையிலிருந்து ஏதாவது கண்டு கொள்ள முடியுமா...? அவளுடைய சம்பாஷணை ஒரு வகையில் எனக்கு உபத்திரவமாக இருந்தது. அவசரப்படுவதுதான் ஆடவர்களின் உடன் பிறப்பாயிற்றே......! கடிந்து கேட்கலாமா என்றும் எண்ணினேன். எதிரிலுள்ள உயிரோவியத்தின் மாயத்தால் என் அவசரம் அமைதியாக மாறிற்று.

அன்பான தொனியில் மறுபடியும் "ஏன் அழைத்தீர்கள்...?" என்றேன். அவளும் ஒருவாறு மனதைத் திடப்படுத்திக்கொண்டு, இன்பமும், அன்பும் இரண்டறக் கலந்த

தொனியில், "வழியே சென்ற ஒரு வாலிபனை, வனிதாமணி ஒருத்தி ஏன் அழைப்பாள்..?" என்றாள். மறு கணம் என் மண்டை வெடித்துவிடும்போ லிருந்தது அம் மங்கையின் வார்த்தைகளால். இத்தனை நேர சம்பாஷணையின் கருத்து இப்போதுதான் புரிந்தது.

என் எண்ணத்திற்கு நேர் விரோதமாக இருந்தது அப் பெண்ணின் வார்த்தை. என்ன பதில் சொல்வதென்றே தோன்றவில்லை. எப்படியும் தப்பிக்க எண்ணி, ஒன்றுந் தெரியாதவன் போல "எதற் காக அழைப்பாள்...?" என் றேன். இதற்குப் பிறகு எங் களுக்குள் நடந்த சம்பாஷணை மிக நீளம். இறுதியாக அன்பு ஒன்றையே அடிப்படையா கக் கொண்டு, மர்மம் என்பது மனதில் இன்றி, என்ன ஆனா லும் ஆகட்டும் என்ற மனோ தைரியத்துடன், புயலில் சிக் கிய புளியங்கொம்பு போல, ஆடி அசைந்து, என் அருகே வந்து, மட்டற்ற அன்போடு, "அன்று உங்கள் பாட்டைக் கேட்டதிலிருந்து நான் உங் கள் அடிமை..." என்று என் காலைப் பற்றினாள். அவளு டைய அன்பு களங்க மற்றது என்பதற்கு அறிகுறியாக, கடிகாரமும் பன்னிரண்டு முறை "டங்-டங்" என்ற ஓசையால் ஆசி கூறிற்று.

எங்கள் காதலுக்கு வாழ்த் துக் கூறுவது போல ஆலயத் தின் அதிர்வேட்டு அலறிற்று.

ஸ்டேஜ் & ஸ்க்ரீன்

(மாதம் இருமுறை சினிமாப் பத்திரிகை)

பிரதி மாதமும் 10, 25 தேதிகளில் வெளிவருவது

★

முதல் இதழ் 10-11-47 அன்று வெளிவருகிறது.

தனிப் பிரதி விலை 4 அணா.

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

★

விவரங்களுக்கு :

ஸ்டேஜ் & ஸ்க்ரீன்

45-46, அரண்மனைக்காரத் தெரு,

சென்னை 1.

கை வண்டிகள்

ஆர். கே. சீனிவாசன்

"புளீ ஈ ஈ, மொளகா, கொத்தமல்லி, கரிமஞ்சள், வெள்ளைப்பூண்டு; மொளகு, கடுகு, சீரகம், வெந்தியம், சீக்கா" என்று தனி ராகத்தில் பாடிக் கொண்டே கை வண்டி இழுத்துக் கொண்டு காலையில் தெருத் தெருவாகச் சுற்றுவதைப் பரம்பரைத் தொழிலாகக் கொண்டிருப்பவர்களை, நீங்கள் தினந்தோறும் கண்குளிரக் கண்டும், செவிக்கினியதாய்க் கேட்டுமிருப்பீர்கள்! ஆனல் அவர்கள் உபயோகிக்கும் கை வண்டி உங்கள் கடைக் கண் வீச்சில் சிக்கி யிருக்காது. அதைப் பற்றி நீங்கள் அக்கறை கொண்டால்தானே, அது சிக்க!

வண்டியிழுத்து, வயிறு வளர்க்கும் ஏழைகளுக்கு இது கண்ணின் மணியாம் விளங்கும். அதற்கு அவர்கள் செய்யும் பராமரிப்பே ஒரு தினுசு! தினந்தோறும், அதைக் கார்பரேஷன் தெருக் குழாயில், தண்ணீர்ச் சண்டை பல இருந்தாலும் முண்டியடித்துப் பல வித முஷ்டி யுத்தத்தி லிறங்கி, அதை நன்ருகக் குளிப்பாட்டும் விதமும்; நாள் தவருமல் அதற்கு அயலான் வண்டியிலிருந்து வண்டிக் கீலே, யாருமில்லாத சமயத்தில், மிகுந்த துப்பறியும் சாமர்த்தியத்தால் திருடி, தன் வண்டியில் "ஸ்டாக்" செய்துக் கொள்வதும்; தப்பித்தவறி யாராவது அக் கை வண்டியைச் சொந்தக்காரர்கள் கண்டு விட்டால் அவர்களுக்கு ஏற்றபடி சாதுர்யமாய், "பக்கா" யோக்கியனைப் போல் அவன் நடிக்கும் விதமும்; வாரத்திற் கொரு முறை இலவசமாகத் தனக்கு அறிமுகமான தச்சனின் உபகரணங்களை இரவல் வாங்கிக் கொண்டு, அவன் ரிப்பேரில் ஈடுபட்டு, மெய் மறந்து கிடப்பதும் பார்க்கக் கண் கோடி வேண்டும்! கையில் பணமில்லாத சமயங்களில், கை வண்டி உதவுகிறது. அதை வேறு வண்டிக்காரனிடம் வாடகைக்கு கொடுத்து விடுகிருன். அல்லது குத்வைக்கு வைத்து விடுகிருன் மார்வாடியிடம்.

பலவித வியாபாரங்களும் இவ்வண்டியின் மேல் நடக்கின்றன என்ருல், கேட்க ஆச்சரியமாயிருக்கும். முன்பு, அதாவது இச் சண்டைக்கு முன்பு, சைனக்காரர்கள், அழகிய பொம்மைகளை

யும், நைஸான துணிமணிகளை யும், மற்றும் பல சில்லரை சாமான்களையும் இதில் போட்டுக் கொண்டு, நின்ற படியே வியாபாரம் செய் வதை நீங்கள் கண்டிருப்பீர் கள்!

படையும் நடுங்கும் சித் திரைமாத கடுமையான உச்சி வெயில். ஓடிந்த பல கட்டு கள் கட்டப்பட்ட, "காது" வளைந்த சிறு வண்டியில், இரு பெரிய, வலிமையான வண்டி யிலும் ஏற்ற முடியாத அவ்வ ளவு சரக்குகளை, ஏற்றிக் கொண்டு, உயர்ந்த பாலத் தின் மேல் ஏற அவஸ்தைப் படும் வண்டியை விட்டுவிடு வார்களா கூலிகள்? அதை அதி ஜாக்கிரதையாக, இது மாதிரியான கை வண்டிக ளின் ஆராய்ச்சியில் ஈடு பட்டு அதில் கரை கண்ட, பிரபல வண்டி மேஸ்திரிகள், உச்சஸ் தாயில் கொடுக்கும் சமய சந் தர்பத்திற் கேற்ற உத்தரவுக ளால் வண்டியை "குடை" சாய்த்துக் கொள்ளாமல், ஒரு நிலையில் கட்டுப்படுத்தி, சேர் பிக்க வேண்டிய இடத்திற்கு சரக்குகளை சேர்ப்பித்து விடு வார்கள்!

"எவ்வளவோ, நவ நாகரீக மான போக்கு வரத்துச் சாத னங்கள் தற்போதிருந்தும் ஏன் இந்தப் பாழும் கை வண் டிகளைக் கட்டிக் கொண்டு அழுகிறார்கள்?" என்று நீங் கள் கேட்கலாம். இதற்குப் பதில் கீழ்க் காணுவது தான்:—

அதிக விரைவாகவும், பக்கு வமாகவும், செல்லும் மோட் டார் லாரிகள் பல இருந்தும், அவை சமயத்திற்கு கிடைக் காது. அப்படி நமக்குக் கிடைத்தாலும் அவர்கள் கேட்கும் "சார்ஜ்", நம்மை அப்படியே பிரம்மிக்கச் செய் கிறது. அப்படி அவர்களுக் கிஷ்டமான பணத்தைக் கொடுத்தாலும், அவை நாம் நினைத்ததற்கு மாறாக, எந்த இடத்திற்குப் போக வேண் டுமோ அதன் சரி மத்தியி லேயே "மக்கார்" செய்கி றது. அது "ரிப்பேர்" ஆகி முடிந்து, புறப்பட ஆயத்த மாக, குறைந்த பட்சம் நாலு மணி அவகாசம் பிடிக்கும். இதனால் சரக்கின் சொந்தக் காரனுக்கு வீண் சிரமமும், அனாவசியமான பண விரய முமே மிச்சம். மனம் குழைந்து, மதுவுண்ட மந்தி ரிக்கு, தேள் கொட்டியதைப் போல் குதிக்கிறான்; மனதை அலட்டிக் கொள்ளுகிறான்.

கைவண்டிகளால்குறைந்த செலவில் மிகவும் நைஸாக எப்படியோ முக்கியடைத்து சரக்குகள் சேர்ந்து விடுகின் றன. மேலும், வியாபாரப் போக்கு வரத்திற் கென்றே சிலர் கை வண்டிகளை வைத் துக் கொண்டிருக்கிறார்கள். வண்டி உபயோகத்திலில் லாத போது, அதை வண்டி

மேட்டுக்கு அனுப்பி அதன் மூலம் அவனுக்குப் பணம் கிடைப்பது, "பழம் நழுவிப் பாலில் விழுந்த" மாதிரியாகிறது. இப்படியாகக் கை வண்டிகள் சொந்தக் காரியத்திற்கும், பண வரும்படிக்கும் பாத்திரமாகி எஜமானின் முகத்தில் எக்களிப்பைத் தாண்டவமாடும்படி செய்து பார்ப்பதில் மிகவும் சந்தோஷம்!

சில கை வண்டிகள், மதியை மயக்கும் போதை மிகுந்த கள் போக்குவரத்திற்காக உபயோகிக்கப்படும். அது செய்யும் வேலைப் பொருத்தத்திற்குத் தகுந்தபடி அவ்வண்டி சரியாக இரண்டு பீப்பாக்கள் கொள்ளு மட்டும் அவன் இடமும அதற்குச் சரியான அளவில் இரு துளைகளும் காணப்படும். இவ் வண்டியைக் கையாளுவோர் பெரும்பாலும் தெலுங்கு பேசும் "போகி"களாகத்தானிருப்பார்கள். அவர்கள் வண்டியைத் தள்ளு முன், வயிறு கொள்ளு மட்டும் "தாக சாந்தி" செய்துக் கொண்டு, பல ஊர்களை கால் நடையால்—கையை வீசிக் கொண்டல்ல—சரியான பளுவை அதாவது இரண்டு பெரிய பீப்பா நிறைய திரவ வஸ்துவை, மிகவும் உதாசீனமாகத் தள்ளிக் கொண்டே, திகட்டும் தெம்மாங்குகளை அள்ளி வீசிக் கொண்டே நடந்து செல்வர். இவ் வண்டிகள் அநேகமாக இரவுகளில்தான் தென்படும். ஏனெனில், வண்டி சுமார் ஒரு காத தூரத்தி லிருக்கும் போதே, இங்கே மூச்சுத் திணறயடிக்கும் அதன் நாற்றம்! பகல் வேளைகளில் ஜன நடமாட்டம் மிகுந்த ரஸ்தாக்களில் தள்ளிக் கொண்டு சென்றால், வண்டி யிழுப்பவனின் முதுகுக்கும், மற்ற அங்கங்களுக்கும் உண்டாகும் பேராபத்தை முன் கூட்டி அறிந்து, சமயோசிதம் போல் நடுநிசியில் புறப்படுவது அவர்கள் தற்காப்பே!

கைவண்டிகள் அநேகமாக மரத்தால் செய்யப்பட்டவை. அவை கட்டை வண்டி என்றழைக்கப்படும். நாகரீகம் முதிர, முதிர இதனமைப்பிலும் மாறு பட்டிருப்பது இயற்கையே! வில் போட்ட சிறு வண்டிகள் பார்ப்பதற்கு அழகாகவும், நேர்த்தி யாகவு மிருக்கும். சில சிறியதாகவும், வண்டியின் மேல் 'டாப்' போடப்பட்டு அழகாக உட்கார சிறு மெத்தைகள் போடப் பட்டிருக்கும். இதில் சிறுவர்களை உட்கார வைத்துப் பள்ளிக்கு அனுப்புவர் பணம் படைத்தவர்கள். சாதாரண வீட்டுக் குழந்தைகள் மரகைவண்டியை வைத்துக் கொண்டு சதா தெருவில்

விளையாடுவது கண் கூடு. பெரியவர்கள் குழந்தைகளை நடைப் பழக்கம் ஏற்படுத்த இவ் வண்டியை உபாயமாக உபயோகிக்கிருர்கள். குழந்தையும் வண்டியின் அழகில் ஈடுபட்டு, சதா அத்துடன் ஓடி விளையாடும்.

வண்டி இழுப்பவர்களை சிலர் கேவலமாகக் கருதுகின்றனர். ஒரு சில சந்தர்ப்பங்களில் நாமும் வண்டி இழுக்கிறோம்! நம் சிறு பையனை வண்டியோட்டக் கற்றுக் கொடுக்கும்போது, முதலில் நாம் வண்டியைக் கையால் பிடித்து, பின் மெதுவாகக் குழந்தையின் சிறு கைகளை அதன் மேல் பிடியில் அமர்த்தி நாம் மெதுவாக வண்டியை உருட்டுகிறோம். அப்போது நாமும் வண்டி இழுக்கிறோம் அல்லவா?

கை வண்டியால் சிறுவர்களுக்குச் சிறுவர் அறிமுகமாகிருர்கள்! மாலை நேரத்தில் விளையாடும்போது புது முகங்களைக் காண்கிருன் சிறுவன். கண்டவுடன் அவர்களுடன் பேசக் கொஞ்சம் சங்கோஜம் ஏற்பட்டுப் பேசாமல் தன் வண்டியைத் தள்ளிக் கொண்டு கிளம்புகிருன். பின்னுலேயே அவன் புது நண்பர்கள் தங்கள் "வாகனங்"களுடன் பின் தொடர்கின்றனர். உடனே அவர்களுக்குள் போட்டி ஏற்பட்டுப் பறக்கிருர்கள் கன வேகத்துடன். அப் பந்தயத்தில் ஜெயித்தவன் தன் பெருமையைச் சொல்லி, தன் வண்டி "பஸ்ட் கிளாஸ்" தச்சனுல் தன் தகப்பனுர் முன்னிலையில் செய்துக் கொடுக்கப் பட்டதாயும், தன் தகப்பனுரே அதில் தன்னைப் பழக்கி, அக் கலையின் நுட்பங்களையும், சூக்ஷ்ம தந்திரங்களையும் போதித்ததால், தான் பந்தயத்தில் ஜெயித்ததாகப் பெரிய கயிறு ஒன்றைத் திரித்துவிடுகிருன்! ஏமாந்த சோணகிரிகளான அவன் சகாக்கள் அதை ஏக மனதுடன் ஆமோதித்துத் தாங்களும், தகப்பனுர் வீட்டுக்கு வந்ததும், "கை வண்டி மந்திர"த்தைப் போதிக்கும் படி விடாப் பிடியிலிறங்குவதென்று தீர்மானிக்கிருர்கள்.

பையன் வீடு திரும்பினதும், மெதுவாக அப்பாவிடம் வார்த்தையை விடுகிருன். இப் புது மந்திரம் யாருக்குத்தான் தெரியும்? பையன் ஏதோ உளறுகிருன் என்று நினைத்து, அவன் மனதை மிட்டாய், காப்பி, சில்லரை முதலியவைகளைக் கொடுத்து மாற்றும் முயற்சியில் தீவிரமாக இறங்குகிருர் தகப்பனுர்.

மிட்டாய், காப்பி இவைகளைக் கண்டு மிரளும் ஆசாமியா இவன்? தன் தோழன் அவ்வளவும் புளுகியதை நிஜமென்று நம்பி, அவன்

சொன்ன பொன் மொழிகளை, இவன் மனதில் பாடம் செய்து கொண்டதும் "மந்திரம்" அவன் மனதை விட்டகலுமா என்ன? அவன் உள்ளத்தில் வேரூன்றிவிட்ட அம் "மந்திரம்" எப்படியிருக்குமோ என்று ஏங்கி மங்கி நிற்கும் அவன் மனமா கேவலம் மிட்டாய்க்கும், காப்பிக்கும் ஏமாந்து போகும்? விடாப் பிடியாக அவன் அம் மந்திரத்தைக் குறித்துப் பேச்சு எடுத்து, முடிவில் அழச் சித்தமாகும் போது, நாமும் மனம் குழம்பி நம் முயற்சிக்கு தோல்வி யடைந்து விட்டதென்ற கோபம் ஒரு பக்கத்துடனிருப்பதால், சமையலறை உள்ளிருக்கும் அவளும் வெளியே வந்து குழந்தையின் வார்சில் சேரும்படியாக பலத்த சப்தங்கள் பையன் முதுகிலிருந்து எழும்புகின்றன! மறுநாள் முதல் கொண்டு அவனுக்குப் புரிந்து விடுகிறது, "கை வண்டி மந்திரம்."

மேல் நாடுகளில் கை வண்டிகளுக்கு—பாரம் இழுக்கும் வண்டிகளல்ல—சிறு குழந்தைகளைத் தூக்கிச் செல்லும் சிருங்கார வண்டிகளுக்கு, மிகவும் முக்கியத்வம் ஏற்பட்டு விட்டது! அநேகமாக, கை வண்டிகள் இல்லாத வீடே இல்லையென்று சொல்லி விடலாம். அப்படி கை வண்டி யில்லை யென்றால், அவ் வீட்டில் சிறு குழந்தைகள் இல்லையென்று திடமாக மார் தட்டிச் சொல்லலாம்! பாருங்கள், கை வண்டிகளுக்கும், குழந்தைகளுக்கும் உண்டாகி யிருக்கும் பந்தத்தை!

இரவில் விளக்கில்லாமல், கை வண்டியைத் தள்ளிச் செல்ல இயலாது. அப்படி விளக்கின்றிச் சென்றாக வேண்டுமென்றால், அவன் பிரவேசிக்கும் வழிகள் சந்து, பொந்தாகவும், சிகப்புத் தொப்பிகள் தாராளமாகச் சஞ்சரிக்கும் இடமில்லாததாகவும், இருக்க வேண்டும். அப்படி யிருந்துங் கூட, போலீஸ்காரனின் கூர்மையான பருந்துப் பார்வையில் விழ ஏது உண்டு. அப்படி அவன் தப்பித் தவறி, காலி பையுடன், மாசக் கடைசியில் பணக் 'காஜி'யிலிருக்கும் போலீஸ்காரனின் வலையில் விழுந்து விட்டால் அதை உதறிக் கொண்டு, வெளி வர முடியுமா, என்ன?

பயந்து விலு விலுக்கும் அவ் வண்டிக்காரனை, அவனுக்கே பதில் தெரியாத பெரிய பெரிய சட்டங்களையும், அச் சட்ட ரீதியாக அவனுக்கு விதிக்கப் போகும் ஒரு சில பயங்கரச் செய்திகளை விஸ்தரித்து, அவன் நிலைமையைக் குழப்பி விடுவான்! "மருண்டு பேயறைந்தவன்"

போல் பயந்து கை கால்களை மார்கழிக் கடுங் குளிரில், வயது முதிர்ந்து தள்ளாடும் எண்பது வயதுக் கிழவனை யும் முறியடித்தவனைப் போல் உதறிக் கொள்வான், அவன். உடனே எதிர் வார்த்தை பேச நா எழாது. கையிலிருக் கும் ஒன்றோ இரண்டோ ரூபாய்களை, போலீஸுக்குச் சமர்ப்பணம் செய்து விட்டு ஊமை போல், வண்டியுடன், "விளக்கு தபஸுக்கு" உட் கார்ந்து விடுவான், அவ்விடத் திலேயே!

புத்திசாலியான சில கை வண்டிக்காரர்கள் விளக் கில்லையென்றவுடன் சொற்ப சிலவில், இரண்டணுவில் நெடுந்தூரத்திற்கும் பிரயா ணம் செய்ய வல்ல நெருப்புப் பந்தத்தை, மறு நிமிஷத்தில் தயாரித்து விடுவார்கள்! ஏதா வது ஒரு விதஎண்ணெயை வாங்கி, அதில் பந்தத்தை ஊற வைத்து, பிறகு நெருப் பேற்றி, நிம்மதியாகச் செல் வர், வண்டியுடன்.

சில சமயங்களில், அதிக மான காற்ருல் நெருப்பு அணைந்தாலும், அதை வாயி ஞல் ஊதி, அதனுல் உண்டா கும் சிறு வெளிச்சத்தையும், சிதறும் நெருப்புப் பொறிக ளையும் ஆதாரமாக கொண்டு போலீஸாரின் கண்களை துடைத்து விடுவார்கள்! திடீ ரென்று பந்தம் அணைவதை யும், மறு நிமிஷம் "பக்", என்று, ஊதினதும் எறிவதை யும் பார்த்தால், ஒரு வேளை கை வண்டியாள் "அக்கினி வசியம்" செய்திருக்கிருனே என்று நினைக்கவும் தூண்டுகி றது!

பாருங்கள்! என் சிறு பையன், தன் கைவண்டி யைச் சுக்கு நூருக்கிக் கொண்டுஇப்போதுபோட்ட புதுச் சொக்காயைப் புழுதி யில் தோய்த்துக் கொண்டு அழுத முகத்துடன், காட்சி யளிப்பதை!

அவனுக்கு தன் கைவண்டி போன ஆத்திரத்தை என் மீது திருப்புவதற்குரிய அறி குறிகள் தோன்றவும் அவ னுக்கும் புதுக் கை வண்டி யொன்றை வாங்கிக் கொடுக் கும் வரை சமாதானம் செய்ய வேண்டிய கடமை என் தலைமீது விழவும், இக் கட்டுரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்!

தீண்டா நெருப்பு

ரா. கிருஷ்ணமூர்த்தி

'நீ செய்த காரியம் என்னவோ எனக்கு சரியாகத் தோன்றவில்லை'

"ஆனால் அந்த நிலைமையில் ஒரு யுவன் வேறு எப்படித் தான் இருந்திருக்கமுடியும்?" இது சேகரனுடைய கேள்வி. முன்பு பேசினவர் ஸ்ரீமான் மனச்சாக்ஷி.

விஷயம் இதுதான். அவனுடன் சேர்ந்து விளையாடி பள்ளிக்கூடத்தில் படித்த பங்கஜத்திற்கு வேறு இடத்தில் வரன் நிச்சயமாயிற்று. கல்யாணக் கடிதம் அவள் கைப்பட அவனுக்கு எழுதியிருந்தாள். இந்தப் பெண்களுக்குத்தான் என்ன துணிவு! அவளுடைய அபிப்ராயத்தை நேரிலேயே கேட்டுத் தெரிந்து கொள்வோம் என்று ஒரு திட்டம் மனதிற்குள் வகுத்துக் கொண்டான்.

"நமது நாகரிகத்தில் பெண் தன் அபிப்ராயத்தை தெரிவிப்பது என்பது அவ்வளவு உசிதமில்லை யென்று தோன்றுகிறது. நல்லதோ கெட்டதோ அவர்களுக்கு விரோதமாக நாம் ஏன் செய்ய வேண்டும்?" என்றாள் பங்கஜம்.

அவளுடைய பதில் அவனுக்கு புதிராக இருந்தது பின்பு யோசித்துப் பார்த்ததில், இந்த இடத்தில் இருப்பதினால் தனக்கு ஒரு நன்மையும் இல்லையென்று தீர்மானித்து படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு பம்பாய் வந்து சேர்ந்தான். இவனுடைய ஆற்றலை ஒரு ஹோட்டலில் "டிக்ரி" காபி தயார் செய்வதில்தான் காட்ட முடிந்தது! ஹோட்டல் முதலாளி ராமையர் ஒரு பழுத்த வேதாந்தி. பலதரப்பட்ட மனிதருடன் பழகுவதால் மனிதனுடைய இன்ப துன்பங்களை நன்கு அறிந்தவர். "வாக்கை நிலையாமை" யைப் பற்றி

அவர் பேச ஆரம்பித்தால் இன்று முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம். அவருக்கு சேகரனிடம் ஓர் அபிமானம் விழுந்ததற்கு காரணம் ஏதாவது சொல்லலாமென்றால் அது இவனுடைய முற்றும் துறந்த கர்ம யோகியின் மனப் பண்பு என்றுதான் சொல்ல வேண்டும். அவன் அங்கு வந்து சேர்ந்த பிறகு தன் ஊரைப் பற்றியே நினைத்துப் பார்ப்பதில்லை. சீக்கிரத்திலேயே அவன் ஹோட்டல் மானேஜர் ஆனான்.

அன்று ஒரு தமிழர் வெகு நேரம் முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்தார். இரவு முதலாளியே நேரில் வந்து அவர் கொடுத்துச் சென்ற "விஸிடிங் கார்டை" அவனிடம் கொடுத்தார்.

"காலையில் என்னிடம் பேசிக்கொண்டிருந்தவருக்கு ஒரு சமையற்காரன் வேண்டுமாம், நல்ல யோக்யதை உள்ளவனாகவும் சாப்பாடு பரிமாறினால் பாந்தமாகவும் இருக்கக் கூடியவனாய் இப்பொழுதே வேண்டும் என்கிறார்," என்று கூறினார். சேகரனுக்கு அவர் சொன்ன விஷயம் ஆச்சரியத்தை விளைவித்தது. "ஏது! இந்த மனுஷ்யன் பரிசாரகனின் ஜாதகத்தைக்கூட பார்க்க வேண்டும் என்பார் போலிருக்கிறதே!" என்றான். "விஸிடிங்கார்டை" பார்த்ததும் மறுபடியும் அவன் முகத்தில் ஆச்சரியக் குறி தோன்றியது! சந்தேகத்திற்கு ஒரு முறை தன் பெட்டியில் பத்திரமாக வைத்திருந்த காகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தான்! ஆம் சந்தேகமில்லை. அவள் புருஷன் பெயர் தான் அது!

"ஏன் இப்படிச் செய்தால் என்ன?" ஒருகணம் தொண்டையை சரிப்படுத்திக் கொண்டு பேசினான். "சமையல் ஆஸாமி விஷயம் நான் கவனித்துக் கொள்கிறேன். நீங்கள் கவலைப் படவேண்டாம். மற்றொரு விஷயம்...... சொல்ல மறந்து விட்டேனே. ஊரில் போய் ஒரு மாஸம் இருந்து விட்டு வரலாம் என்று நினைக்கிறேன். தங்கள் சம்மதம் கிடைத்தால்தான் அதுவும்!"

முதலாளி உடனே அனுமதி கொடுத்து விட்டார். மறுநாள் காலை, மாதுங்காவில் "பிராமின் வாடா" தெருவில் ஒரு ஆஸாமி விலாஸம் விசாரித்துக் கொண்டு போனான். வீட்டைக் கண்டு பிடித்து விட்டான். உள்ளே போவதா வேண்டாமா?

"ஸார், ஸார்!"

"யார் அங்கே? ஓஹோ! நீங்களா! ராமையர் தானே தங்களை இங்கு அனுப்பினது?"

"இல்லை ஆமாம். ஆமாம். உம்...... எங்கேயோ ஞாப

கம். நீங்கள் மாத்திரம்தான் இவ்விடம்........."

"என்? நம்ம 'ஒயிப்' இங்கு தானிருக்கிறுள். புது ஊரான படியினுல் 'க்ளேமேட்' ஒத்துக் கொள்ள வில்லே. அதனுலே இரண்டு நாளாக 'ஸ்லேட்டா' ஜுரம். வாருங்கள் உள்ளே போவோம்" என்று சொன்னுர். சேகரனுக்கு "நம்ம ஒயிப்" என்று கூறியதும் சுரீரென்று தைத்தது. அவர் மேன் மேலும் எதையோ சொல்லிக் கொண்டே வீடு பூராவும் சுற்றிக் காட்டினுர்.

"என் ஸார்! உங்களுக்கு என்னிடம் வேலே பார்ப்பதில் ஒரு ஆட்சேபனேயும் இல்லேயே. சம்பள விஷயம் மிஸ்டர் ஐயர் சொல்லியிருப்பார் என்று நினேக்கிறேன்," என்ருர்.

சேகரனுக்கு அவர் குழந்தை உள்ளம மிகவும் பிடித்திருந்தது என்றே கூற வேண்டும். "சம்பளத்தைப் பற்றி என்ன? மனிதனுக்கு பணம் பெரிதில்லே ஸார்! அதை விட மனுஷ்யாள்தான் முக்கியம்" என்ருன்.

இருவரும் பேசிக் கொண்டே பங்கஜம் படுத்திருந்த அறைக்கு வந்து சேர்ந்தனர். சிறு துயிலில் ஆழ்ந்திருந்த அவளேக் கண்டதும் ஹிருத்யம் நின்று விடும் போல் இருந்தது சேகரனுக்கு. ஆஹா எவ்வளவு இன்பமான நாட்கள். தான் ஏன் மனிதனுக ஆனேம். சிறு பையனுக இருந்து அவளும் அவனருகில் இருந்து விட்டால்......?

நடு நடுவிலே அவள்புருஷர் சேகரரின் சிந்தனேயை மடக்கிக் கொண்டு வந்தார் என்றே கூற வேண்டும். "இன்று நீங்கள் சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள், ஹோட்டலிலிருந்து 'தாட்' எடுத்து வந்து விடுவோம்" என்ருர் அவர்.

அன்று இரவு அவளுக்கு ஜுரம் கடுமையாக அடித்தது. தன் பிரக்ஞையில்லாமல் பிதற்றினுள். சேகருக்கு எப்பொழுதுமே இளகினமனது. அதுவும் தன்னுடைய அந்தரங்க தேவியான அவள் கஷ்டத்தை அவன் பொறுப்பானு? இரவு ஒருவரும் தூங்கவில்லே. பேசவில்லே. எல்லாம் ஸமிக்ஞைமூலமே நடந்ததெனக் கூறலாம். அந்த கடினமான இரவு ஒரு விதமாக அபாயமின்றி கழிந்தது. பிறகு அநேக இரவுகள் பகலுடன் போட்டி போட்டு கழிந்தன.

இன்று பதிமூன்ருவதுநாள்; சேகர் வந்ததிலிருந்து ஒருநாளாவது அவன் சமையல் திறமையைக் காட்ட முடியவில்லே. தினம்கஞ்சிதான் அவளுக்குப் பத்தியம். சேகரனுக்கு நளமகாராஜன் கதை ஞாபகத்திற்கு வந்தது. மனதிற்குள் சிரித்துக் கொண்டான்

ஆனல் நளனுடைய மனைவி தமயந்தி. பங்கஜம் அப்படி யல்லவே! நளன் என்றதும் ஏழரை நாட்டான் ஞாபக மும் அவனுக்கு வந்தது. சற்று திடுக்கிட்டு விட்டான். வெள்ளைக்காரனுக்குபதிமூன் ருவது நாள் போதாத நாள் என்பார்கள். இன்றுஏதாவது விபரீதம் ஏற்படாமல்இருக்க வேண்டுமே என்ற கவலை ஏற்படவே அவனது மனம் ஒரு நிலையிலிராமல் தவித்தது.

அதற்கேற்ருர்போல், பங் கஜத்தின் கணவர் வெளியே போயிருந்தார். சேகர் முதல் நாள் அவளை பார்த்ததோடு சரி. அதன் பிறகு அவன் அந்த "ரூம்" பக்கமே போனதில்லை. இன்று தன் தைரியத்தை யெல்லாம் வர வழைத்துக்கொண்டு மெள்ள ஹாலில் வந்து எட்டிப்பார்த் தான். இன்றும் அதே போலவே துயிலில் இருந் தாள். ஆனல் அவள் முகம் தெளிவாக இருந்தது. கார ணம்......? அவன் கொடுத்து வந்த அன்பு மயமான ஆகாரம்தானு?

ஒரு முடிவுக்கு வந்தவன் போல் தன்னைத்தானே அடக் கிக் கொண்டு அவளுடைய கட்டிலில் அமர்ந்தான். இன் னமும் அவள் எழுந்திருக்க வில்லை! முகத்தில் முத்து முத் தாக வியர்வை அரும்பியிருந் தது ஒரு அழகாகவே இருந் தது. அவளுக்கு நித்திரை கலையாமல் மௌனமாக நெற்றியருகில் வந்து தனது அன்பு முத்திரையை வைத் தான். இனி அவன் அங்கிருந் தால் மன்னிக்க முடியாத குற்றம் செய்வான் என்பதில் ஐயமில்லை! உடனே அவன் வெளியே வந்து விட்டான். தன்னுடைய பெட்டி படுக் கையைக் கூட எடுத்துக் கொள்ளாமல் தலை தெறிக்க வீதியோடு திருடினவனைப் போல் ஓடினன்.

ஆம்! அந்தசமயம் அவள் முகத் தில் ஏற்பட்ட தைவ ஒளியைக் கண்டு அவன் நடுநடுங்கி யிருக்க வேண்டும். அப்புறம் அவன் எங்கு சென்ருனே?

ஒரு வாரம்கழித்து 'தேவி' பங்கஜம் என்று ஒரு கடிதம் வந்தது. அதில் சேகரன் நடந்தது பூராவும் எழுதி தனக்கு விரக்தி வந்து விட்ட தாகவும் ஹிமாலய காடுகளில் பழங்களை உண்டு காலம் கழிக்கப் போவதாகவும் எழுதியிருந்தான்.

இரண்டு வருஷம் கழித்து தமிழ் நாட்டிற்கு அவள் பிர ஸவத்திற்காக வந்திருந்தாள். ஊரில் விசாரித்ததற்கு சேக ரனுக்கு கல்யாணம் ஆகி ஓர் ஆண் குழந்தையும் இருப்ப தாக தெரியவந்தது. மற் ருெரு அதிசயமென்னவென் ருல் அப்பொழு தெல்லாம் சேகரனுக்கு மூச்சு விடக் கூட ஒழிய வில்லை என்பது தான். மனைவிக்கு பதில் சொல்

வதற்கும் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டவுமே அவனுக்கு சரியாயிருந்தது! ஒரு நாள் தம்பதிஸமேதராக பங்கஜத்தைப் பார்த்துவரச் சென்றான் சேகரன்.

இன்று அவள் பெயருக்கு ஏற்ப சிவந்த மேனியுடன் இருந்தாள். கர்ப்ப பாரம் முன்பு பிடித்துத்தள்ள சிரித்துக் கொண்டே அன்னம் போல நடந்து வந்து அவர்களை வரவேற்றாள்.

"என்னப்பா எப்பொழுது ஸன்னியாஸம் வாங்கிக் கொள்வதாக உத்தேசம்? அதற்கு முன்னதாக எனக்கு ஒரு நாள் விருந்து செய்து போடவேண்டும்! இல்லாவிட்டால் விடமாட்டேன் தெரிந்ததா?" என்றாள்.

சேகரின் மனம் கொஞ்சும் பாவனையிலிருந்தது. அவனுக்காக பங்கஜம் மூன்று வயது சிறியவளாய் இருந்த போதிலும் அவள் கரங்களைத் தொட்டு கண்ணில் ஒற்றிக் கொண்டான். அதற்கு பதில் ஒரே புன்னகைதான்!

வந்தவர்களுக்கு காப்பி தயார் செய்யச் சொல்வதற்காக சேகரின் மனைவியை கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள்.

சேகர் மனம் பெரிய குற்றத்திற்கு பரிகாரம் செய்து கொண்டுவிட்டதாக நினைத்து ஓர் ஆழ்ந்த பெருமூச்சு விட்டது.

இந்த ஈரல் குலை கட்டி வியாதியை ஜம்மியின் "லிவர்க்யூர்" தான் நிச்சயமாக குணப்படுத்தும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

மைலாபூர் :: :: மதராஸ்

ஆயுள்தண்டனை

க.நா. சுப்ரமண்யம்

அவளுக்கு வயசு பதினெட்டுத்தான் இருக்கும். வக்கீல் ராமநாதனின் வயசுக்கு அவள் அவருடைய பெண்ணாகவும் இருக்கலாம்—பேத்தியாகவும் இருக்லாம். இரண்டும் இல்லை. அவள் அவருடைய இப்போதைய ஆசை நாயகி.

ராமநாதனின் வீட்டிலே தான் இருந்தாள் அவருடைய மனைவியும். ஆனால் அவள் இருப்பிடம் சமையல் அறை தான். அதற்கு வெளியே அவள் ஆதிக்கத்தை இழந்து பதினைந்து வருஷங்களுக்கு மேலாகி விட்டன.

காபிப் பாத்திரத்தை கீழே வைத்து விட்டு வக்கீல் ராமநாதன் அவளை இருகைகளாலும் அணைத்து இழுத்து சோபாவில் தனிப்பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டார். “உனக்குச் சொல்லாத விஷயம் என்ன? உலகத்திலே எவ்வளவு அசடர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்தேன் சிரிப்புவந்தது” என்றார். அவர் குரலும் கொஞ்சுதலாகவே இருந்தது.

பாலா சொன்னாள் “உலகத்திலுள்ள அசடர்களிலே நானும் ஒருத்திதானே? உன்னைப்போன்ற மகானுடைய கடாக்ஷம் ஒரு விநாடி என் மேல் விழுந்ததும் நான் பிரமித்து விடுகிறேன்—அது நிலைத்து விடும் என்று எண்ணி ஏமாறுகிறேன். அசடுதானே நானும்”

“நீயா! அசடா? உன்னைப் போன்ற சாமர்த்தியம் எனக்குக் கூடக் கிடையாதே! என்னைச் சுற்றிவளைத்துத் தட்டி நீட்டி உன் சுண்டு விரலுக்கு மோதிரமாக அணிந்து கொண்டு விடுவாயே!” என்றார் வக்கீல் ராமநாதய்யர். லேசாகப் பிரியமாகத் தன் கையால் பலாவின் கன்னத்தில் தட்டினார்.

இந்த விளையாட்டும் கொஞ்சுதலும் இன்னும் அதிக தூரம் போயிருக்கலாம். ஆனல் அதற்குள் வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

16

முகமாறுதல்

வந்தவர் பாங்கர் பாலு. தாள்களில் அறிக்கையில் நன்றி தெரிவித்தது மட்டும் வக்கீல் ராமநாதன் செய்ததற்குப் போதியது ஆகாது என்று நேரிலேயே பேச வந்து விட்டார். முந்திய தினம் ஒருகால் மணிநேரத்திற்குமேல் பேச அவகாசம் இல்லை.

"உங்கள் அறிக்கையைத் தான் படித்துக்கொண்டிருந்தேன், பாலு" என்று அவரை வரவேற்றுர் வக்கீல் ராமநாதன்.

உள்ளே வந்த பாங்கர் பாலுவின் கண்ணில் அறை வாசற்படித் திரைக்கப்பால் மறைந்து கொண்டிருந்த அழகிய உருவம்பட்டது—அவர் நாசியில் பெண்மையின் வாசனை வீசியது. தன்னைப் போலவே ராமநாதனும் சுக புருஷர்தான் என்பதை பாங்கர் பாலுவும் அறிந்தவரே.

பக்கத்தில் ஒரு சோபாவில் அமர்ந்தபடியே பாலு சொன்ஞர். "இப்பொழுது நினைத்துப் பார்த்தால் அதிககாலமாகவில்லை போல இருக்கிறது. ஆனல் மூன்று வருஷங்களாகி விட்டன"

"மூன்று வருஷங்கள் என்பது ஒரு விதத்தில் பிரமாதம் தான்—ஒரு விதத்தில் ஒன்றுமில்லை என்றும்தான் சொல்லலாம். ஆனல் இந்த மூன்று வருஷங்களில் சீதாராமன் மாறி விட்டிருப்பதுதான் தான் ஆச்சரியம்" என்ருர் ராமநாதன்.

"ஆமாம், எனக்கே ஆச்சரியமாகத்தான் இருந்தது. ஏதோ கொஞ்சதுக்குக் கொஞ்சம் மாறியிருப்பான் என்று எண்ணினேன். இப்படி அடியோடு மாறியிருப்பான் என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. இனிமேல் தான் ரிடையரான மாதிரி எதிலும் பட்டுக் கொள்ளாமல் வாழலாம் அவன். எல்லா அலுவல்களையும் பார்த்துக் கொள்வான் என்கிற தைரியம் ஏற்பட்டு விட்டது" என்ருர் பாங்கர் பாலு.

"சீதாராமனுக்கு இது மறு ஜன்மம்தான்" என்ருர் வக்கீல்.

"எங்கள் இருவருக்குமே இது மறு ஜன்மம் என்று தான் சொல்ல வேண்டும்" என்ருர் பாலு.

"துரதிருஷ்ட வசமாக நேர்ந்த அனுபவம். அதைத் தவிர வேறு என்ன சொல்ல

இருக்கிறது?'' என்ருர் வக்கீல்.

''எனக்கு ஒன்று தோன்றுகிறது. உங்களுக்கு ஒரு காலத்தில் லக்ஷ்மணனை நன்ருகத் தெரியும் அல்லவா?''

''ஆமாம்'' என்று சுருக்கமாகப் பதில் அளித்தார் வக்கீல் ராமநாதன்.

''அந்த லக்ஷ்மணனைக் கொன்றது உண்மையில் யார் என்று கண்டுபிடிப்பது இவ்வளவு நாள் கழித்து சிரமமாக இருக்குமா?''

''சிரமம்தான். ஆனல் நீங்களோ நானே மனசு வைத்தால் முடியாது என்பதில்லை'' என்ருர் வக்கீல், சிறிதுநேரம் யோசித்துவிட்டு.

''அப்பீலில் என்னை விட்டு விட்டார்கள் என்பது உண்மைக்குற்றவாளி யார் என்று கண்டுபிடித்து......''

''அதெல்லாம் வீண் சிரமம், நம்மை விட்டது தொல்லை என்று ஒதுங்கி விடுவதுதான் லக்ஷணம்'' என்ருர் வக்கீல்.

''நான் அப்படி நினைக்கவில்லை......''

''......ம்......ம்......'' என்ருர் ராமநாதன்.

''தவிரவும் பாங்கி சம்பந்தமான எல்லாவற்றையும் சீதா கவனித்துக்கொண்டு விடுவான். எனக்கு பொழுது போக வேண்டுமே! நான் இதைக் கவனிக்கலாம் என்று நினைக்கிறேன்'' என்ருர் பாலு.

''முடிவு செய்து விட்டீர்களானல் நான் எதுவும் சொல்வதற்கில்லை. இருந்தாலும்......''

''முடிவு செய்வதென்ன? ஒரு வாரம் ஓய்வு எடுத்துக் கொண்டு......''

பக்கத்து மேஜையிலிருந்த டெலிபோன் மணி அடித்தது. வக்கீல் ராமநாதன் போய் எடுத்து ''ஹல்லோ'' என்ருர்.

''ஆமாம்...யார் அது? ஓ அப்படியா? வாயேன், உடனே வா...அப்படியா? என்னலான உதவியை நான் செய்யத் தயார். சரி, குட் மார்னிங்'' என்று டெலிபோனைக் கீழே வைத்தார்.

அவர் முகத்தில் ஆத்திரமும் குரூரமும் கலந்த ஒரு பாவம் பசு பலித்தது. அவரையே கவனித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த பாங்கர் பாலு அந்த முக மாறுதலைக் கண்டு திடுக்கிட்டுப் போனர். ஒரு புது ராமநாதனைக் காண்பது போல இருந்தது அவருக்கு. வக்கீல் ராமநாதன் பழைய இடத்தில் பழைய மாதிரியே வந்து உட்கார்ந்து கொண்டு ''அந்தக் கதிர்வேலு பேசினது, அவனும் உங்கள்போலவே லக்ஷ்மணனைக் கொன்ற

வனைக் கண்டு பிடிக்க முயலப் போகிறுனம். இங்கு ஒன்பது மணிக்கு வருவதாகச் சொன்னுன் " என்ருர்.

கதிர்வேலு சொன்ன இந்தச் செய்திக்காகவா வக்கீல் ராமநாதனின் முகம் இவ்வளவு மாறிற்று—இதில் ஏதோ விசேஷம் இருக்கும் என்று தோன்றியது பாலுவுக்கு. ராமநாதனுக்கு நன்றி செலுத்த கடமைப் பட்டவர் தான் என்ருலும், ராமநாதனைப் பற்றி அவருக்கும் நல்லபிப்பிராயம் கிடையாது. விஷயம் ஏதாவது தெரிந்திருக்குமோ? கதிர்வேலுவைத் தான் அங்கு, ராமநாதன் முன்னிலையில் சந்திக்காதிருப்பதுகூட நல்லதுதான் என்று தோன்றிற்று அவருக்கு.

"நான் வரட்டுமா? வேறு ஒன்றும் விசேஷம் இல்லை. கதிர்வேலு வந்தால் என் வீட்டுக்கு அனுப்புங்கள். நான் பத்துமணிக்கெல்லாம் வீடு திரும்பிவிடுவேன்." என்று கூறிவிட்டுக் கிளம்பினுர் பாலு.

"காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாமே..."

"வேண்டாம். வேண்டாம். காலையில் ஒரு தடவைக்கு மேல் சாப்பிட்டால் சிறமப்படும்." என்று கூறி விடை பெற்றுக்கொண்டு கிளம்பினுர் பாங்கர் பாலு.

17

ஜமால்

பாங்கர் பாலு போன பிறகு ஒரு கால்மணி நேரம் யோசனையில் ஆழ்ந்தவராக சோபாவிலேயே சாய்ந்து கிடந்தார்வக்கீல் ராமநாதன், பிறகு மேஜையண்டை போய் உட்கார்ந்து கொண்டு சில நிமிஷங்கள் யோசித்தார். மேஜை வலது ஓரத்தில் பதிந்திருந்த ஒரு ஸ்விச்சை அமுக்கினுர்.

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் வாட்டசாட்டமான ஒரு ஆசாமி உள்ளே வந்தான். அவனிடம் வக்கீல் சொன்னுர்: "ஜமால்! இப்பொழுது ஒன்பது மணிக்கு இங்கு என்னைத் தேடிக் கொண்டு ஓர் ஆசாமி வருவான். கதிர்வேலு என்று பெயர் அவனுக்கு..."

ஜமால் குறுக்கிட்டான் "எந்தக் கதிர்வேலு?..."

"அவன்தான் நேற்று விடுதலையான ஜேபடி ஆசாமி. அவன் இங்கிருந்து கிளம்புகிற விநாடிக்குப் பிறகு ஒவ்வொரு விநாடியும் அவன் எங்கெங்கே போகிறுன். என்னென்ன செய்கிறுன் என்பது நமக்குத் தெரிய வேண்டும். ஒவ்வொரு விநாடியும் ......ஆமாம் தெரிந்ததா?"

"சரி"

"யார்யாரைப் பார்க்கிறுன் என்றும், முடியுமானுல் என்

னென்ன பேசுகிறுன் என்றும் கவனிக்க வேண்டும் என்ருர் வக்கீல் ராமநாதன்.

"இவ்வளவு சிறமப்படுவானேன்? அவன் எங்கும் போகாமல், யாருடனும் பேசாமல் பார்த்துக்கொண்டு விட்டாலோ?" என்ருன் ஜமால் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு.

"நான் சொன்னபடி செய் ஜமால். பிறகு அவசியமானல் அவனை உன்னிடமே ஒப்பு வித்து விடுகிறேன். அதற்குறிய காலம் வர வேண்டாமா? பொறு வரும்" என்ருர் வக்கீல் ராமநாதன்.

"ஜகத்திடம் சொல்லி விட்டால் அவன் கவனித்துக் கொள்வான்! அப்புறம்..."

"சற்றுமுன் பாங்கர் பானு வந்துவிட்டுப் போனர். அவர் பத்துமணிக்கு வீட்டிலிருப்பதாகச் சொனஞர். கதிர்வேலு இங்கிருந்து கிளம்பி நேரே அவர் வீட்டுக்குத்தான் போவான் என்று எண்ணுகிறேன். அவர்கள் இருவரும் என்ன வோதுகிருர்கள் என்பது தெரிந்தால் சுலபமாக இருக்கும்." என்ருர் வக்கீல்.

"சற்றுமுன் அவர்கள் வீட்டுக் குமாஸ்தா வந்தான் இன்னும் போயிருக்க மாட்டான். கவனித்துச் சொல்கிறேன். அப்புறம்..." என்ருன் ஜமால்...பிரும்மலோகத்துக்குப் போய் அமர்ந்த கலசம் ஒன்றைக் கொண்டுவா என்ருல் அதற்கும் ஆளனுப்புகிறேன் என்று ஜமால் சொல்வான் போலே இருந்தது.

"மூன்ருவது காரியம் பகாளித் தெருவுக்கு ஆளனுப்பி நேற்று நான் சொன்னபடித் தகவல் ஏன் வரவில்லை என்று கேட்டனுப்பு" இந்தத் தகவல் உடனே வர வேண்டும்.

"சரி"

"நீ போ" என்ருர் வக்கீல் ராமநாதன். ஜமால் போய் விட்டான்.

ஜமால் போன பிறகு பாலா வந்தாள். "அந்தத் தடியன் போய்விட்டானு? அவனைக் கண்டாலே எனக்குப் பயமாயிருக்கு!" என்ருள்.

"அவனைக் காணுவானேன்?" என்ருர் வக்கீல் சற்றுப் பதட்டத்துடனே.

"போற இடத்திலெல்லாம் அவனும் வந்து நின்ருல் நான் என்ன பண்றதாம்! கண்ணை மூடிக்கிறதோ?" என்ருள் பாலா.

"அப்படி வந்து நின்று தொந்தரவு பண்ருனு? முன்னயே சொல்லியிருந்தாயானல் கண்டிச்சிருப்பேனே கண்டிக்கிறேன். நீ உள்ளே போ இப்போ எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு இப்போ" என்ருர் வக்கீல் ராமநாதன்.

"எப்போ பார்த்தாலும் என்ன வேலை; வேலை; வேலைன்னு... அப்படி என்ன வேலை தான் செய்யறேள்னு எனக்கும் சொல்லமாட்டேன் என்கிறீர்களே?" என்று செல்லமாகக் கொஞ்சிக் கொண்டே வக்கீலுடைய நாற்காலின் கைப்பிடியில் சாய்ந்துக் கொண்டே அவர் மேஜை மேலிருந்த பேப்பர்களின் மேல் கைவைத்தாள்.

"ஆபீஸ் நேரத்தில் கொஞ்சப்படாதுன்னு எத்தனை தடவை சொல்றது உனக்கு. யாராவது வந்தா கிழவனும் குமரியும்னு பரிஹாசம் பண்ணுவா போ உள்ளே" என்றார் ராமநாதன்.

"உங்க பிரியம் இருக்கிற வரைக்கும் நான் பிரத்தியாருடைய பரிஹாசத்துக்கெல்லாம் பயப்படவாபோறேன்" என்றாள் பாலா.

"போதும் கார்த்தாலேக்கு! போ உள்ளே" என்று சற்று அதட்டலான குரலிலே கூறினார் வக்கீல்.

பாலுவும் உள்ளே போனாள். அவள் போய் ஐந்து நிமிஷங்களுக் குள்ளாகவே கதிர்வேலு அங்கு வந்து விட்டான்.

18

கதிர்வேலுவின் சந்தேகங்கள்

கதிர்வேலுவுக்கு மூன்று வருஷங்களாக ஏற்பட்ட அனுபவங்களையும்கூட அதிகமாக சென்ற ஒரு நாளைய அனுபவங்கள் அவநம்பிக்கைக்கு உள்ளாக்கியிருந்தன. சாதாரணமாகப் பெரிய மனிதன் கணக்காக இருப்பவன் கூட உண்மையில் எப்படிப் பட்டவனோ என்று சந்தேகிக்க இடம் இருக்கத்தான் இருந்தது என்பது நிதரிசனமாகத் தெரிந்தது. யாரையும் சரியாகப் பரீக்ஷித்துப் பார்க்காமல் நம்பிவிடுவதில்லை என்று அவரை தீர்மானத்துக்கு வந்து விட்டான். ஜோபடித் திருடனைப் பெயர் வாங்கிவிட்டு யாரையும் நம்பி ஏமாந்து விடுவதென்பது சரியான காரியமல்லவே துப்புத் துலக்குவதுவேறு என்று தொடங்கி விட்ட கதிர்வேலு எவ்வளவோ சாமர்த்தியசாலிகளான எதிரிகளை எதிர்த்து தன்னந்தனியாகப் போராட வேண்டி வரலாம். சாமார்த்தியமும் அவநம்பிக்கையுமே ஆயுதங்கள் தனக்கு என்பதை அவன் கெட்டிக்காரத்தனமாக உணர்ந்து அவற்றையே நம்பி நடக்கத் தயாரானன்.

வக்கீல் ராமநாதனைப் பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க அவனுக்கு அவரிடம் அவநம்பிக்கை அதிகரித்தது. சாதாரணமாக வக்கீல்களை நம்பாத மனிதன் அவன். ஒரு ஆபத்திலிருந்து தப்ப வக்கீல் உதவியை நாடி, அவ்வுதவி பெரு

வதற்குப் பதில் வக்கீல் வலையில் சிக்கிக்கொள்ளுவதென்பது எவ்விதத்திலும் அவன் மனசிற்கு உகந்ததாக இல்லை. அவன் தகப்பன் தன்னிடம் இருந்த சொல்ப ஆஸ்தியையும் இழந்து விட்டுத் தன் மகனை ஒப்பாண்டியாகத் தெருவில் விட்டதற்கு ஆதி காரணம் ஒரு வக்கீல்தான்.

அதெல்லாம் ஒரு புறமிருக்க ராமநாதன் விஷயத்தில் சந்தேகத்துக்கு அவனுக்கு இடம் தந்த முக்ய விஷயம் இதுதான்: லஷ்மணன் கொலையுண்ட அன்று அந்த மூலைக் கடையில் கதிர்வேலுவுடன் இருந்த ஒரு ஆசாமி ராமநாதனின் வேலைக்காரன் ஜமால் ஒருவன்தான். அவன் சொல்லி ராமநாதன் அறிந்து அவன் மூலமே போலீசுக்கும் தான் அந்த மூலையில் இருந்த செய்தி எட்டியிருக்க வேண்டும் என்கிற சந்தேகம் அவனுக்கு. தான் இருந்ததை அறிந்திருந்த போலீசாருக்கு ஜமாலும் உடன் இருந்தது எப்படித் தெரியாமல் போய் விட்டது என்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது கதிர்வேலுக்கு. தனக்கும் அந்தக் கொலைக்கும் எவ்வளவு சம்பந்தமுண்டோ அவ்வளவே இருக்கலாம் ஜமாலுக்கும் அதற்கும். இருந்தாலும்......அது மட்டும் எப்படித் தெரியாமல் போய்விட்டது சகலமும் தெரிந்தவர்களுக்கு?, என்று யோசிக்காமல் கதிர்வேலுவால் இருக்க முடியவில்லை.

சிறையில் ஒருதரம் வக்கீல் ராமநாதன் அவனைப் பார்க்க வந்தார். வந்தவரிடம் தன்னுடன் ஆஜானுபாகுவாக ஓர் ஆளும் அன்று அந்த மூலைக் கடையில் நின்று பேசிக் கொண்டிருந்தான் என்று தெரிவித்தான். அவன் பெயர் ஜமால் என்பதும், அவன் ராமநாதனின் வேலைக்காரன் என்பது தனக்குத் தெரியும் என்று அவன் காட்டிக் கொள்ளவில்லை. ராமநாதன் அதைப் பற்றிக் கோர்ட்டில் எதுவும் சொல்ல வேண்டியது அவசியமில்லை என்று சொல்லிவிட்டார். கதிர்வேலுவும் சொல்லவில்லை. இருபத்திநாலு மணி நேரமாகவே அதைப்பற்றிச் சிந்திக்கக் கதிர்வேலுவுக்கு அவகாசம் இருந்தது வந்திருக்கிறது. ராமநாதனின் நடத்தை இந்த ஒரு விஷயத்திலேனும் சந்தேகாஸ்பதமானதுதான் என்று தீர்மானிக்க கதிர்வேலு தயங்கவில்லை.

இரண்டாவது விஷயம்: அந்த ஜமாலின் நடத்தையும் அன்று அவ்வளவாக சுத்தமானதாக இல்லை என்பதுதான். தன்னுடைய துப்பறியும் வாழ்க்கையையே ஜமாலைக் கண்காணிப்படி ஒரு

அவசியமான காரியமாக இருக்கலாம் என்று நினைத்தான். கதிர்வேலு பலசாலிதான். ஆனால் ஜமாலைநேருக்கு நேராக எதிர்த்து ஐந்து நிமிஷங்கூட நின்று நிதானிப்பது முடியாத காரியம்தான். ஒரு தரம்தான் பார்த்திருந்தான். என்றும் ஜமாலைப்பற்றிய வரையில் சர்வஜாக்கிரதையாகவே இருக்க நேரிடும்.

அன்று காலையில் டெலிப்போனில் ராமநாதனிடம் லக்ஷ்மணனின் கொலை விஷயமாக உண்மையைக் கண்டு பிடிப்பது என்கிற தன் உத்தேசத்தைத் தெரிவித்த போது ஒரு விநாடி ராமநாதன் கேலி செய்வது போன்ற ஒரு குரலில் வார்த்தை சொல்லியதும் அவன் மனசில் இருந்த சந்தேகத்தை வளர்த்தது.

பஸ்ஸில் டவுனில் கிளம்பி மைலாப்பூருக்கு வரும்வழி நெடுகத் தன் சந்தேகங்களை வளர்த்துக்கொண்டு வந்தான் கதிர்வேலு. உண்மையில் எவ்வளவை வக்கீல் ராமநாதனிடம் தெரிவிப்பது எவ்வளவை மறைப்பது என்று தீர்மானிக்க முடியவில்லை அவனால். போய் நேரில் பார்த்துச் சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி பேசுவது என்கிற முடிவைத் தவிரவேறு எவ்விதமான முடிவிற்கும் வரவில்லை அவன்.

19

ஒளிவு மறைவு

வக்கீல் ராமநாதனின் பங்களாவிற்குள் கதிர்வேலு நுழையும் போது மணி சரியாக ஒன்பது அடித்தது.

“வா. இப்படி உட்கார்! தேவலையே சரியாக ஒன்பது அடிக்கறச்சேவந்துட்டயே” என்று அவனை வரவேற்றார் வக்கீல்.

“ஆமாம், ஜெயிலில் சில நல்ல பழக்கங்களும் கற்றுக் கொண்டோமே!” என்று கேலியாகவே பதில் அளித்தான் கதிர்வேலு.

இந்தக் கேலிக் குரலின் தாத்பர்யம் என்னவென்று அறிய விரும்புகிறவர்போல நிமிர்ந்து அவனையே ஒரு விநாடி நோக்கினார் ராமநாதன். எத்தனையோ கில்லாடிகளுடன் பழகிக் கில்லாடி சுபாவத்தை நன்கு அறிந்த கிரிமினல் வக்கீல் ராமநாதனுக்கும் கூட கதிர்வேலுவின் அந்த முகபாவத்தை புரிந்துகொள்ள முடியவில்லை என்று ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

“......ம்......நீ போனில் கூப்பிட்டப்போது இங்கு பாங்கர் பாலுவும் இருந்தார். அதற்குச் சற்று முன்தான் அவரும் உன்னைப் போலவே லக்ஷ்மணனின் உண்மைக் கொலையாளியைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று

தனக்கு உத்தேசம் இருப்ப தாகக் கூறினர். நீயும் அப்படியே போனில் கூறிய வுடன் எனக்கே ஆச்சரிய மாகப் போய்விட்டது.

இத்துடன் நிறுத்தியிருந் தாரானல் கதிர்வேலுவும் ஏமாந்திருப்பான். ஆனல் வக்கீல் ராமநாதன் தன் எதிரியின் கெட்டிக்காரத்தனத்தை சற்றுக் குறைவாகவே மதித்துவிட்டார். அவர் தொடர்ந்து சொன்னர். "நீ கூடக் கவனித்திருப்பாயே! போனில் ஒரு விநாடி நான் ஆச்சரியத்தால் திகைத்தது... என் குரல்கூட மாறியிருந்திருக்குமே."

டெலிபோனில் அவர் குரல் மாறியது உண்மை. ஆனல் இது நடிப்பு, அந்த உண்மை எதிரிக்கு வெட்ட வெளிச்சமாகிவிடக் கூடாது என்கிற தற்காகப் போட்டுக் கொண்ட ஒரு வேஷம் என்று தீர்மானிக்கக் கதிர்வேலுவுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. கதிர்வேலு சொன்னன். "நீங்கள் போனில் சொன்னதை நான் கவனிக்கவில்லை. நான் உங்களுடன் பேசிக்கொண்டிருந்த சமயம் தெருவில் என்னையே கவனித்துக் கவனித்துக்கொண்டு ஒருவன் நின்றிருந்தான். அவன்......"

"கிரைம் பிராஞ்சுப் போலீஸ்காரன் யாராவது இருக்கும்" என்று அலக்ஷியமாகச் சொன்னர் வக்கீல் ராமநாதன்.

இந்த அலக்ஷியக் குரலும் வெறும் வேஷம்தான் என்பது வெளிப் படையாகவே தெரிந்தது. யார் அப்படிக் கவனித்தது என்றறிய அவருக்கு ஆவல் என்பதைக் கதிர்வேலு ஊஹித்துக் கொண்டான். இந்த ஊஹம் அவனுக்குப் புதுத் தெம்பைக் கொடுத்தது.

"அப்படித் தானிருக்கும் என்று நானும் பிறகு புரித்துக்கொண்டேன். ஆனல் அந்தச் சமயம் நீங்கள் பேசியதை நான் சரிவரவே காதில் வாங்கவில்லை" என்ருன் கதிர்வேலு. (தொடரும்)

பதிலுக்குப் பதில்

ராமன்:—எனக்குக் காபி வேண்டும் கொஞ்சம் ஹோட்டலுக்குச் சென்று வாங்கி வாயேன்.

கோவிந்தன்:—காபிக்குப் பணம்?

ராமன்:—பணமில்லாமல் காபி வாங்கிவருவதுதான் சாமர்த்தியம்.

கோவிந்தன்:—ஒரு டம்ளருடன் வந்தான்.

ராமன் :—டம்ளரில் காபியைக் காணுமே!

கோவிந்தன்,—காபி இருக்கிற பாவனை யாகக் குடிப்பது தான் சாமர்த்தியம்.

Printed by P. Arunachalam at the Commercial Printing & Publishing house 46, Armenian St., Madras 1. Edited by M. S. Basu & Saraswathi Basu Published by M. S. Basu at, 46 Armenian Street, Madras. 1.